1364

egistered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 10—No. 7.

21 SEP 1937
MADRAS

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| ர் கo | ஈசுவர ஆண்டு ஆடித் திங்கள்<br>1937ஆ ஜூலைமீ | இதழ் எ |

உள்ளுறை — பக்கம்

சிவாலய தத்துவம் ... ... ௩௩௭
கல்விற் செம்பிற் கடவுளிருக்கை ... ... ௩௫
௭௦
இரிஷியூர் திருக்கோயில்கள் நிலைமை ...
. ௩௮௦
சமாஜ விசேஷ மகாநாடு ...

பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

சைவ சித்தாந்த மக மாஜம்
திருவருளகம்", 22-A, கல்லுக்கார தெரு, மயிலாப்பூர், சென்

ஆண்டுச் சந்தா ரூபா 2. 187 தனிப் பிரதி அண

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் 32-ம் ஆண்டு நிறைவுவிழா டிசம்பர் மாதத்திலன்றி செப்டம்பர் மாதத்திலேயே பெங்களூரில் நடைபெறுவது உசிதமா என்பதைப்பற்றியும், அவ்வாறு நடைபெறுவதாயின் தலைவர் முதலிய நடைமுறை விவரங்களைப்பற்றியும், அவ்வாறு நடத்தற்குத் தேவையான சில விதிகளின் திருத்தங்களைப்பற்றியும் ஆலோசித்து முடிவுசெய்ய நமது சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று 1937ஷ ஜூலைமீ 17-ம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ‘குகாநந்த நிலயத்’தில் கூடும். அப்போது போதுமான கூட்ட நிறைவெண் (Quorum) வாராவிடின் அக்கூட்டம் சமாஜ விதிகளின்படி அடுத்த நாள் (18-7-37) மாலை 4 மணிக்கு அதேயிடத்திற்கூடி வருவோரைக் கொண்டு முடிவடையும். மேற்கூறிய விஷயங்களைப்பற்றிய தங்கள் கருத்துக்களை ஷை பொதுக்கூட்டத்துக்கு வர இயலாத அங்கத்தினர் தபால் மூலம் உடனே காரியதரிசிக்கு அறிவித்தல் நலம்.

2. நமது சமாஜத்தின் ஆடிமாதக் கூட்டம் திருப்போரூரில் முருகப்பெருமான் திருக்கோயிலில் 1937ஷ ஆகஸ்டுமீ 1உ ஞாயிற்றுக்கிழமை ஆடி கிருத்திகைத் திருநாளன்று மாலை 4 மணிமுதல் 8 மணிவரையில் நடைபெறும். பல பேறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். தலைவர், சொற்பொழிவாளர், சொற்பொழிவுகளின் பெயர்கள் முதலிய விவரங்கள் தனி விளம்பரமாகத் திருப்போரூரில் வழங்கப்படும்.

3. ஆடி அமாவசை, ஆடிப் பூரம், ஆடி சுவாதி (சுந்தரர் திருநக[illegible]த்திரம்), ஆவணி மூலம், ஆவணி அவிட்டம் முதலிய திருநாட்களில் [illegible]ங்கள் தலத்துத் திருக்கோயிலில் நடைபெறும் உத்ஸவங்களையொட்டி [illegible]ாஜக் கூட்டங்களை நடத்திவைக்கக் கருதும் அன்பர்கள் உடனே காரி[illegible]ரிசிக்கு அறிவிக்க வேண்டும்.

4. நமது ச[illegible] வெளியீடுகளுள் முதல் எழு திருமுறைகள் இரண்டாம் பதிப்புக்[illegible]க வெளிவந்து விட்டன. ஏனைய திருமுறைகளை இரண்டாம் பதிப்பு[illegible]ளாக வெளியிடுதற்குரிய செலவை முன்பணமாகத் தந்து விற்ற[illegible]தல்செய்த பிறகு மீண்டும் பெறுதற்கிசையும் அன்பர்கள் உடனே [illegible]ரியதரிசிக்கு அறிவிப்பார்களாக.

Reg. M. 2330

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் ௧௦ | ஈசுவர ஆண்டு ஆடித் திங்கள் 1937ஞு ஜூலை மீ | இதழ் ௭

## சிவாலய தத்துவம்

[சச்சிதானந்த அடிகள்]

[இது, திருக்கொள்ளம்பூதூர் கும்பாபிடேகத்தில் நடைபெற்ற சமாஜ விசேட மகாநாட்டில் வெளியிடப்பட்ட "சிவாலயமும் கும்பாபிடேகமும்" என்ற நூலின் முக்கிய பகுதிகள் சிலவற்றின் திரட்டு.]

### சிவாலயத்தின் சிறப்பு.

உலகத்தில் பல சமயிகளும் தங்கள் தங்கள் கடவுளை வழிபடத் தங்கள் மனதுக்கியைந்தபடி ஆலயங்களை அமைக்கிறார்கள். ஆனால் எல்லா ஆலயங்களும் அவரவர் சமயக் கொள்கைகளிற் கண்ட உண்மைகளை புணர்த்து முறையில் கட்டப்படவில்லை என்பது ஒருதலை. சைவசமயத்திலோ அவ்விதமன்று. சிவாலயங்கள், சைவசமயத்தின் கொள்கைகளைத் தமது உறுப்புக்கள் ஒவ்வொன்றாலும் உணர்த்துவதனால், ஆலயங்கள் எல்லாவற்றுள்ளும் அவை சிறந்தனவாகும்.

சென்னை 600 008.

## சிவாலயத்தின் அமைப்பு.

சிவாலயமானது, கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபனமண்டபம், தம்பமண்டபம், நிருத்த மண்டபம் முதலிய மண்டபங்களும், பஞ்சப் பிராகாரம், கோபுரம், யாகசாலை, நந்திபீடம், பலிபீடம், துவஜ ஸ்தம்பம் முதலியவைகளும் உடையதாக அமைக்கப்பெறும்.

## சிவாலயம் அண்டபிண்ட சொரூபமாயுள்ளது.

சிவாலயம், அண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளையும், பிண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளையும் குறிப்பதாகும். அண்டத்தில் காணப்படும் அத்துவாக்களின் வகையாலும், உடலிற் காணப்படும் உறுப்பு வகையாலும், தியானத்தின் நிமித்தம் உடலிற் பாவிக்கப்பெறும் ஆதாரங்களின் வகையாலும் சிவாலயம் அண்டபிண்ட சொரூபமாயுள்ளது.

(க) அத்துவாக்களின் வகை :

அண்டத்தில் சுத்த மாயை, சுத்தா சுத்த மாயை, அசுத்த மாயை என மூன்று பிரிவுகள் உண்டு.

சிவாலயத்தில் கர்ப்பக்கிருகம் சுத்த மாயையாகும்; மகா மண்டபம் சுத்தாசுத்த மாயையாகும் ; வெளிப் பிரகாரங்கள் அசுத்த மாயை யாகும்.

அண்டத்தில் மாயையில் சாந்தியாதீதகலை, சாந்திகலை, வித்யாகலை, பிரதிஷ்டாகலை, நிவிர்த்திகலை என ஐங்கலைகள் உண்டு. கலை என்பது பிரிவு.

சிவாலயத்திலுள்ள ஐந்து பிரகாரங்களும் ஐந்து கலைகளாகும். இன்னும் தத்துவம் முதலியவற்றால் ஒற்றுமைப் பட்டிருத்தலை விரிவஞ்சி விளக்காமல் விட்டோம். சிவாகமங்கள் முதலிய சைவ நூல்களிற் பரக்கக் காணலாம்.

(உ) உடலின் உறுப்பு வகை :

பிண்டமாகிய நமது உடலில் தலை, கழுத்து, மார்பு, நாபி, பாதம் என ஐந்து பிரிவுகள் உண்டு.

சிவாலயத்தைப் புருஷ வடிவாகக் கொண்டால், அதிலுள்ள கர்ப்பக்கிருகம் தலையாகும், அர்த்த மண்டபம் கழுத்தாகும், மகா மண்டபம் மார்பாகும், யாகசாலை நாபியாகும், கோபுரம் பாதமாகும்.

மற்றொரு வகையால் உடலில் வாய், நாக்கு, அண்ணுக்கு, பஞ்சேந்திரியங்கள், இருதயம், உயிர் எனப் பல பிரிவுகள் உண்டு.

சிவாலயம் உடலாகும். கோபுரம் வாயாகும். நந்தி நாக்காகும். துவஜ ஸ்தம்பம் அண்ணுக்காகும். தீபங்கள் பஞ்சேந்திரியங்கள் ஆகும். கர்ப்பக்கிருகம் இருதயமாகும். சிவலிங்கம் உயிராகும்.

மற்றொரு வகையால் கூறுதும். பிண்டத்தில் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம், என ஐந்து கோசங்களும், தூல சரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம் காரண சரீரம் என ஐந்து சரீரங்களும் உண்டு. இவற்றின் விவரங்களைச் சித்தாந்தப் படவிளக்கத்திற் காணலாம்.

சிவாலயத்தில், வெளிப் பிராகார முதல் உட்செல்லு முறையில், உள் பிராகாரங்கள் ஐந்தும் இராஜசபை, தேவ சபை, நிருத்தசபை, கனகசபை, சிற்சபை என்னும் பஞ்ச சபைகளும், ஐங்கோசங்களும், பஞ்ச சரீரங்களும் ஆகும். இன்னும் விரிப்பிற் பெருகும்.

(ரு) ஆதார வகை :

உடலில் யோகாவத்தையில் தியானிக்கப் பெறும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி,

ஆஞ்ஞை என ஆறு ஆதாரங்களுண்டு. சிவாலயத்தில் உள்ள கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஸ்நபன மண்டபம், தம்பமண்டபம், நிருத்தமண்டபம் ஆகிய இவை ஆறும் ஆறு தாரங்களைக் குறிக்கும்.

சிவாலயமானது செங்கல், வெண்கல், கருங்கல், நீறு, மணல், நீர், காரம் எனும் எழுவகைப் பொருள்களாலானது. அவை தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு, மச்சை, மேதை, சுவேதநீர் எனும் எழுவகைத்தாதுக்களைக் குறிக்கும்.

இதுகாறும் கூறியவை சரீரப்ரஸ்தார சிவாலயப் பகுதிகளாகும்.

சிவாலயங்கள் சரீர பிரஸ்தாரம், இருதயபிரஸ்தாரம் என இருவகைப்படும். சரீர பிரஸ்தாரமாவது சரீரத்தின் உறுப்புக்களைப் போன்ற பகுப்புக்களுடன் கூடியது.

1—1. சர்ப்பக்கிருகம்—மூலாதாரம்.
2. அர்த்தமண்டபம்—சுவாதிட்டானம்.
3. மகாமண்டபம்—மணிபூரகம்.
4. ஸ்நபன (ஸ்நான) மண்டபம்—அநாகதம்.
5. அலங்காரமண்டபம்—விசுத்தி.
6. சபாமண்டபம்—ஆக்கினை.

2—1. பஞ்சாவரணங்கள்—பஞ்சகோசம்.
2. சப்தாவரணங்கள்—சப்ததாது.
3. மூன்றாவரணங்கள் - மூன்று தேகங்கள் (தூலம், சூக்குமம், காரணம்.)

3— பஞ்சசபைகள் :—
1. இராஜசபை—அன்னமயகோசம்.
2. தேவசபை—பிராணமயகோசம்.
3. நிருத்தசபை—மனோமயகோசம்.
4. கனகசபை—விஞ்ஞானமயகோசம்.
5. சிற்சபை—ஆனந்தமயகோசம்.

4—1. பல கதவுகளும் (மூடித் திறக்கின்றதனுல்) ஆணவம்.
2. துவஜஸ்தம்பம்—வீணுதண்டு.
3. பாசமிரண்டு—இடகலை பிங்கலை.
4. ரிஷபக்கொடி—பசுபதி தரிசனம்.

இனி இருதயப்ரஸ்தார சிவாலயப் பகுதிகளாவன :—

சிவபிரானைப் புறத்தே பூசிப்பதைப்போல, அகத்தே பூசிப்பதற்கு முப்பத்தாறு தத்துவ சொரூபமான இருதய கமலம் கற்பிக்கப்படும். அதில் பிருதிவி கிழங்கு, அப்பு முதல் காலமீருகிய 24 தத்துவங்கள் எண் விரலளவினதாகிய நாளம், மாயை நாளத்துக்கும் பூவுக்கு மிடையிட்ட மூட்டு, சுத்த வித்தை எட்டிதழ், ஈச்சுரம் 64 கேசரம், சாதாக்கியம் பொகுட்டு, விந்து 51 - விதை, நாதம் விதையிலுள்ள முளை; இவைகள் கெற்பக் கிரகமும் தூபிகளுமாகும்.

(ச) அவத்தை வகை :

ஆன்மா, சரீரத்திலே கேவல துரியாதீதாவத்தைத் தானமாகிய மூலாதாரத்திலே ஆணவ சகிதமாய்ப் புருடனுடன்கூடித் தனித்திருந்தும், துரியத்தானமாகிய நாபியிலே பிராணனுடன் கூடியும், சுழுத்தித்தானமாகிய இருதயத்தில் சித்தத்துடன் கூடியும், சொப்பனத்தானமாகிய கண்டத்தில் பிராணனொழிந்த வாயுக்களொன்பதும், சித்தம் நீங்கிய அந்தக்கரணம் மூன்றும், சத்தாதி ஐந்தும்,வசனுதி ஐந்தும் ஆக இருபத்திரண்டும் முன்னுங் கூட்டி 25 கருவிகளுடன் கூடியும், கேவல சாக்கிரத்தானமாகிய புருவமையத்தின்கீழ் ஞானேந்திரிய கன்மேந்திரிய பஞ்சகங்களுடன் முன்னுங் கூட்டி 35 தத்துவங்களுடன் கூடியும், சகல சாக்கிரத்தானமாகிய புருவமத்தியில் 96 கருவிகளுடன் கூடிச் சர்வ வியாத்தனுயிருந்தும்; மீண்டும் முன்போல் கேவல சாக்கிராதி யவத்தைகளை யடையுமுறையில், ஆங்காங்கு நிற்குங் கருவிகளை நிறுத்தி மூலாதாரத்தில் தனிப்படும்.

அதைப்போலவே சிவாலயத்தில், யதாஸ்தானத்தில் சிற்சத்தியுடன் சிவபிரான் தனித்திருந்தும், அநுக்கிரகார்த்தம் எழுந்தருளு முறையில் அடுத்த மண்டபத்தில் திருநந்தி தேவரையும், அடுத்த மண்டபத்தில் பூதகணங்களையும், அடுத்த மண்டபத்தில் பிரமாதி தேவரையும், தம்ப மண்டபத்தில் சாதாரண ஜனங்களையும் கூடி உலாப் போந்து உள்ளே செல்லுமுறையில் அவரவரை ஆங்காங்கே நிறுத்திப்போவர். இவ்வாறு சிவாலயம் அண்டபிண்ட சொரூபமாயுள்ளதை அறியவும்.

## சிவாலயம் சர்வதேவதா சொரூபம்.

கடவுள் ஒருவராய் இருந்தும், ஆன்மாக்களை அநுக்கிரகிக்கவேண்டியும், நிக்கிரகிக்க வேண்டியும், கொண்ட அருள் வடிவுகள் பலவுள. அவை சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், இடபாரூடர் முதலிய அநுக்கிரக வடிவங்களும், காமதகனர், திரிபுரதகனர் முதலிய நிக்கிரக வடிவங்களுமாகும். இன்னும் ஆன்மாக்களின் பக்குவ பேதத்திற்கிணங்க அவைகளுணர்ந்து வழிபட் டுய்யும்பொருட்டுக் கடவுளதிகாரம் பெற்று நிக்கிரகானுக்கிரகங்களைச் செய்கின்ற தேவர்களுமுண்டு. அவர்கள் விஷ்ணு, பிரமா, இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், சூரியன், சந்திரன் முதலியவர்களாவர்.

முற்சொன்ன கடவுளரின் வடிவங்களும் பின் சொன்ன அவரது ஏவலாளராகிய தேவர்களும் சிவாலயத்தில் இடம் பெற்றுப் பூசிக்கப் பெறுகிறார்கள். ஆதலால் சிவாலயம் சர்வ தேவதாசொரூபமாகும்.

## சிவாலயம் சிவசொரூபம்.

சிவபிராணுகிய கடவுளுக்கு அத்துவா வடிவு, மந்திர வடிவு, அருள் வடிவு என மூவகை வடிவுகள் உண்டு. அவற்

றுள் அத்துவாவடிவு தூல சரீரமாகும், மந்திரவடிவு சூக்குும சரீரமாகும், அருள் வடிவு காரண சரீரமாகும்.

(க) வடிவு பேதம் மூன்று.

(i) **அத்துவா வடிவு.**

கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்பனவற்று லமைந்தது. சிவாலயம் இவ்வாறுவகை அத்துவாக்களாக அமைந்திருத்தலுமன்றி, இவற்றின் மந்திரங்களால் ஒவ்வோருறுப்பும் பூசிக்கப் பெறுவதாலும், சிவாலயம் சிவசொரூபமாகும்.

(ii) **மந்திர வடிவு.**

மந்திரங்களிற் சிறந்த பஞ்சப்பிரம ஷடங்க மந்திரங்களாலும்,ஏனைய மந்திரங்களாலும் சிவபிரான் பூசிக்கப் பெறுவதைப் போலவே சிவாலயத்தின் ஒவ்வோருறுப்பும் அம்மந்திரங்களால் பூசிக்கப் பெறுவதால், சிவாலயம் சிவசொரூபமாகும்.

(iii) **அருள் வடிவு.**

அருள் வடிவானது வித்தியா தேகமெனவும் பெறும். இது தத்துவாதீதமாய், திரோதான சத்திக்கும் அப்பாற்பட்டு, உன்மனுகலைக் கண்ணே சிற்சத்தி காரியமாய் விளங்குவது. இதுவே சிற்கனமேனி எனப்படுவது. சிவாலயத்திலும் இவ்வருள் வடிவு பாவிக்கப்பெற்றுப் பூசிக்கப் பெறுவதால் சிவாலயம் சிவசொரூபமாகும்.

(உ) இலிங்கபேதம் மூன்று.

சிவபிரானுக்கு அத்துவா வடிவு தூல லிங்கமாகும், மந்திரவடிவு சூக்கும லிங்கமாகும், அருள் வடிவு கார்ண லிங்கமாகும்.

சிவாலயத்தில் கோபுரம் தூல லிங்கமாகும். கர்ப்பக் கிருக விமானம் சூக்கும லிங்கமாகும். சிவலிங்கம் காரண லிங்கமாகும். மற்ருெருவகையில் தூபி தூலலிங்கமும், சிவ லிங்கம் சூக்குமலிங்கமும், பலி பீடம் பத்திரலிங்கமுமாகும். ஆதலால் சிவாலயம் சிவசொரூபமாகும்.

(௩) உருவ வகை மூன்று.

சிவபிரானுக்கு அருவம், அருவுருவம், உருவமென மூவகை வடிவங்களுண்டு. அருவம் சிவம், சத்தி, நாதம், விந்து எனும் மூர்த்திகளாகும். அருவுருவம் சாதாக்கிய வடிவமாகிய சதாசிவ மூர்த்தியாகும். உருவம் மகேசுரர், உருத்திரர், காரணேஸ்வர விஷ்ணு, காரணேஸ்வர பிரமா எனும் நான்கு மூர்த்திகளாகும்.

சிவாலயத்தில் பள்ளியறையில் உள்ள கண்ணுடியில் அர்த்த சாமகாலத்திலும், திருவனந்தலிலும் காட்டப்பெறும் சத்தி சிவசோதி சாயை அருவ வடிவமாகும். சிவலிங்கம் அருவுருவ வடிவமாகும். சந்திரசேகரர் முதலிய விக்கிரகங் களும் விநாயகர் முதலிய விக்கிரகங்களும் உருவ வடிவமாகும். ஆதலால் சிவாலயம் சிவசொரூபமாகும்.

இங்ஙனம் அருவ வழிபாட்டை உணர்த்தும் பள்ளிய றைத் தரிசனத்தையும், ஒடுக்கத் தோற்றங்களை உணர்த்தும் பள்ளியறையில் அர்த்தசாம பிராதக்காலங்களில் நடத்தப் பெறும் பூசைச் சிறப்பையும், உய்த்துணராத பேதைமக்கள், தமதறியாமைக்கேற்ப வெவ்வேறு கதைகளைக் கூறி, தீவினைக் காளாவர். இவர்களுக்கு அறிவுகொளுத்தினுங் கொள்ளார்.

இன்னும் மற்ருெருவகையாற் கூறுதும். சிவலிங்கம் தூலம் சூக்குமம் அதிசூக்குமம் காரணம் மகாகாரணமென ஐந்து பேதமாகும். சிவாலயத்தில் விமானம் தூலலிங்கம், கர்ப்பக்கிருகம் சூக்குமலிங்கம், அர்த்தமண்டபம்முதல் விரு

ஷபமண்டபம் வரை அதிசூக்குமலிங்கம், துவஜம் பலிபீடம் காரணலிங்கம், சிவலிங்கம் மகாகாரண லிங்கமாகும்.

இவ்வாறு சிவாலயம் சிவசொரூபமாதலை உணர்க.

## சிவாலயம் முப்பொருள் உணர்த்துவது.

சைவசமயம், கடவுளொருவர் உண்டென்றும் அவர் சிவபிரானேயென்றும், உயிர்கள் பல வுண்டென்றும், பாச முண்டென்றும் கூறும். கடவுள் ஆனந்த சொரூபர். உயிர் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையது. பாசம் துக்க வடிவமானது. பாசத்தால் துக்கியாயிருக்கிற உயிர், பதியால் துக்கத்தினின்றும் நீங்கிச் சுகத்தைப்பெறும். இதுவே சிவ சமயத்துணிபு. இதனைச் சிவாலயமும் உணர்த்துகிறது. சிவலிங்கம் பதி, நந்தி உயிர், பலிபீடம் பாசம். மற்றொருவகை யால் துஜஸ்தம்பம் பதி, நந்தி பசு, பலிபீடம் பாசம். மற்றொரு வகையால் துவஜஸ்தம்பம் பதி, அதிற்றூக்கப்படும் தரும விடைக்கொடி பசு, அதைக்கட்டும் கயிறு பாசம். மற்றொரு வகையால், கற்பூரதீபம் பதி, தீபம் பசு, தூபம் பாசம். இன்னும் விரிக்கிற்பெருகும். இவ்வாறு சிவாலயம் பதி, பசு, பாசமென்னும் முப்பொருள்களை உணர்த்துதலை அறிக.

## சிவாலயம் சிவபிரானருட்டொழிலை உணர்த்துவது.

சிவபிரான் ஆன்மாக்களின் பொருட்டுச் செய்யுந் தொழில்கள் ஐந்து. அவை சிருட்டி, திதி, சங்காரம், திரோப வம், அனுக்கிரகம் எனப் பெயர் பெறும். அருள் மேலீட் டால் செய்யப்பெறுவதால் இவைகள் அருட்டொழில்கள் எனப்படும்.

சிருட்டியாவது ஆணவமல சம்பந்திகளான உயிர்களின் உறைவிடமான மாயையிலிருந்து உலகம், உடல், உறுப்பு

புசிப்புப்பொருள்களாகியவைகளைத் தோற்றுவித்தல். உயிரை எக்காலத்திலும் தோற்றுவித்தலில்லை. உயிர்கள் கடவுளைப் போல் அநாதியே உள்ளவை. திதியாவது தோற்றுவிக்கப் பட்ட தநுகரணபுவனபோகங்களைப் புசிப்புக் காலம் வரை நிறுத்துதல். சங்காரமாவது தோற்றுவிக்கப்பட்ட தநுவாதிக ளைத்தத்தம் காரணத்தில் ஒடுக்குதல். சைவநூல்களில் அழிவு என்பது தூலநிலையிலிருந்து சூக்கும நிலையை அடைவதேயா கும்; சூனியமாக அழிந்துபோவதன்று. திரோபவமாவது பக்குவம் வருமளவும் கன்மபலன்களை உருசிப்பித்துப் புசிப் பிக்கை. அநுக்கிரகமாவது கடவுள் பக்குவான்மாக்களுக்குத் தீக்கை செய்து ஆணவாதிபாசங்களை அழித்துத் தனதானந் தத்தை அருளித் தன்னிடத் தைக்கியமாக்குவது. இது காறுங் கூறியது மகாபஞ்சகிருத்தியமாகும். இனி நித்திய பஞ்சகிருத்தியமாவது :—தூல சரீரங்களைக் கொடுத்தல் சிருட்டி, பிராரத்த கர்மம் புசிப்பாகும்வரை தூல சரீரங்களை நிறுத்துதல் திதி, பிராரத்தகர்மபலபோக மொழிந்தவுடன் தூல உடம்புகளை அழித்தல் சங்காரம், கர்மத்தை உருசிப் பித்து ஆணவவலியை அழித்தல் திரோபவம், சிவமாக்கிப் பேரின்பத்தைக் கொடுப்பது அநுக்கிரகம்.

இங்ஙனங் கூறிய இருவகைப் பஞ்சகிருத்தியங்களையும் சிவாலயத்தில் நடக்கும் நித்தியபூஜையும் உத்ஸவமும் உணர்த்தும்.

(க) நித்திய பூஜையில் நித்திய பஞ்சகிருத்தியம்.

அபிடேகம் சிருட்டி, கௌதுகபந்தனம் திதி, தூபம் சங்காரம், கற்பூர தீபம் திரோபவம், கற்பூரக்கிளைத் தீபம் அநுக்கிரகம் என இவ்வாறு உணரத்தக்கது.

மற்றொரு வகையால் அபிடேகம் சிருட்டி, நைவேத்தி யம் திதி, நீராஞ்சனம் சங்காரம், பலி திரோபவம், ஸ்ரீபலி நாயகர் எழுந்தருளுதல் அநுக்கிரகமாகும்.

(உ) சோடசோபசாரம் பஞ்சகிருத்தியம்.

சிவாலயங்களில் செய்யப்பெறும் உபசாரக்கிரியைகளில் முக்கியமானவை பதினாறு. அவற்றின் பெயரைப் பின்வரும் செய்யுளாலுணர்க.

"ஆசனமா வாகனம்பாத் தியாசமனார்க் கியமு
மபிடேகம் பரிவட்ட மணிதருநற் கந்தம்
வாசநறு மலர்நைவேத் தியமொடுதாம் பூல
மணமலிந்த தூபமொடு தீபமுமா ருத
தேசுமிகு மாலத்தி தட்டிதிரு நீறு
சேர்ந்தசுளு கோதகமாச் செப்புபதி னாறு
மீசனுக்கா முபசாரம் புரிந்தவர்க ளிகத்தே
யின்பமெல்லா முறுவர்பின்பு சாயுச்சியமெய் துவரே"

இவற்றில் சிலவற்றை விளக்குவாம். ஆசனம்: எங்கும் வியாபியாக விருக்கின்ற பரசிவம் தன்னிதயத்தே யெழுந்தருளும்படித் தன்னைக் கொடுத்தல். ஆவாகனம்: சிவபிரானது பரிபூரணமாகிய ஞானப்பிரகாசத்தைத் திருவருளாலறிந்து அதிலழுந்துதல். தாபனம்: அத்திருவருட் பிரகாசத்தில் சரியாது நிலைபெறல். சந்நிதானம்: ஆன்மாவின் அறிவு சிவபூரணத்திலும் சிவபூரணத்துவம் ஆன்ம அறிவிலுமாக இடைவிடாமல் ஒன்றி அந்நியோந்நியமாயிருத்தல். சந்நிரோதனம்: அவ்வாறே எக்காலத்தும் நீக்கமின்றியிருத்தல். பாத்தியம்: இச்சா ஞானக்கிரியா சொரூபமான திருவடிகளிற் சேர்தல். அருக்கியம்: திருமுகம் என்னும் அருளைத் திருமுடியிற் பொருந்துதல். ஆசமனம்: சத்திகளின் விளக்கத்திலே திருவருளாகிய திருமுகத்திற் பொருந்துதல். புஷ்பம்: மனமாகிய புட்பக்குடலையில் ஞானுஷ்ட புட்பமாகிய கொல்லாமை, வாய்மை, பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, தவம், அன்பு என்னும் எட்டுவித மலர்களை நிறைத்துச் சாத்தல். தூபம்: அறியாமையை

நெருப்பிலிட்டுப் புகைத்தல். தீபம் : ஞானப் பிரகாசத்தை ஏற்றுதல். நைவேத்தியமும் முகவாசமும் : அகங்காரம், சங்கற்பம், விபரீதம், குரோதம், மோகம், விதனம், மதம், நகை, என்ற ஆணவாதி மலங்களின் காரியங்களைப் பலி கொடுத்தலேயாகும். தீபம் : பலவற்றுள்ளும் கற்பூர தீபம் விசேடமானது. வெண்மையான அது, அக்கினி பற்றிய விடத்து அதன் மயமாய்ச் சிறிதும் மிச்சமின்றி, அக்கினியிற் கரைந்து போவது, படிகம்போன்ற ஆன்மா சிவஞானப் பிரகாசம் பற்றியவிடத்து அதன் மயமாய்த் தற்போதம் சிறிதுஞ் சீவியாதபடி அருளிலழுந்திக் கரைதலைக் குறிக்கும்.

இவ்வுபசாரங்களைப் பஞ்ச பூதோபசார மெனக் கூறுப. பிருதுவி சம்பந்தமான கந்தமூலபலாதிகள், சுகந்த புஷ்பாதிகள் முதலியவை பார்த்திவோபசார மாகும். அப்பு சம்பந்தமான தயிர் பால் நீர் முதலியவை ஆப்பியோபசார மாகும். தேயுசம்பந்தமான தீபங்கள், ஆபரணங்கள், கண்ணாடி முதலியவைகள் தைசசோபசாரமாகும். வாயுசம்பந்தமான தூபம், சாமரம், விசிறி முதலியன வாயவியோபசாரமாகும். ஆகாய சம்பந்தமான மணியோசை, மந்திரவோசை, கீதம், தோத்திரம் முதலியன காயசோபசார மாகும் (ஆகாயோபசாரமாகும்). இவ்வாறு ஏனையவைகளையும் அறிந்து இவற்றில் அடக்கிக் கொள்க.

(௩) நைமித்திகத்தில் பஞ்சகிருத்தியம்.

(i) மஹோத்ஸவம்.

அங்குரார்ப்பணமும் துவஜாரோகணமும் சிருட்டி; வாகனாதி உற்சவங்கள் திதி; சூரணோற்சவமும் இரதோற்சவமும் சங்காரம்; மௌனோற்சவம் திரோபவம்; தீர்த்தோற்சவம் அநுக்கிரகம். இங்ஙனம் உற்சவத்தில் மகா பஞ்சக் கிருத்தியங்களைக் கண்டுகொள்க. உற்சவமென்ற சொல்லுக்கு மேலான பஞ்சகிருத்யமென்று பொருள்.

(ii) தேர்.

மந்தரகேசரி மலைகள் அச்சு; சூரிய சந்திரர் சக்கிரம்; ஆறு இருதுக்கள் சந்தி; பதினன்கு உலகங்கள் பதினன்கு தட்டு; ஆகாயம் ஆசனம்; உதயகிரி அஸ்தகிரிகள் கூவிரம்; நதிகள் கொடிகள்; நட்சத்திரங்கள் விதானம்; மோட்ச லோகம் மேல்விரிவு; யாகங்கள் சட்டம்; நாள் முதலியன குறுக்குமரங்கள்; அஷ்டமலைகள் தூண்கள்; அட்ட யானைகள்-தாங்குவன; சப்த சமுத்திரங்கள் தேர்ச்சீலை; கன்ம ஞானேந்திரியங்கள் கலன்கள்; கலைகள் மூளைகள்; வேதாங்க உபாங்க மநுசாஸ்திரங்கள் மணிகள்; வாயுக்கள் படிகள்; நான்கு வேதங்கள் குதிரைகள்; கங்கை முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டுவோர்; ஊர்வசி முதலிய கணிகைமகளிர் நடனம் புரிவோர்; மேருமலை வில்; சரசுவதி வில்லிற் கட்டியமணி; வாசுகி நாண்; விஷ்ணு பாணம்; அக்கினிதேவன் பாணத்தின் முனை; வாயுதேவன் அம்பிறகு; பிரமன் சாரதி; திரிபுரங்கள் மும்மலம்; தாராகாக்ஷன் கமலாக்ஷன் வித்யுன்மாலி எனும் மூவர்களும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகையான்மாக்கள்; தேவபதம் மோக்ஷபதமாகிய திருவடி - என இவ்வாறறிக. மற்றொருவகை - உச்சிக்குடை பிரமரந்திரம்; கலசம் சோடசாந்தத்தானம்; மேலுள்ள முதலாமடுக்கு துவாதசாந்தத்தானம்; இரண்டாமடுக்கு மஸ்தக ஆதித்தானம்; மூன்றாமடுக்கு மஸ்தக மத்தியத்தானம்; நான்காமடுக்கு மஸ்தகாந்த ஸ்தானம்; ஐந்தாமடுக்கு லலாடமத்தி; ஆறாமடுக்கு புருவமத்தி; நடுவேயுள்ள ஏழாமடுக்கான 32 குத்துக்கால்கள் 32 தத்துவம், முற்றுறைகள் கண்கள்; பிற்றுறைகள் சிகைகள்; பக்கத்துறைகள் இருசெவி; பீட முதற்பகுதி வாய்; இடப்பக்கத்திலுள்ள இருகுதிரை வடி

வங்கள் இடப்பாக சூரிய சந்திரகலாவாசிகள் ; வலப்பக்கத்துள்ள இரு குதிரை வடிவங்கள் வலப்பாக சூரியசந்திர கலாவாசிகள் ; சாரதிவடிவம் மும்மலரூபமும் நாசியுமாகும் ; எட்டாமடுக்கிடப்பகுதி அந்தக்கரண சொரூபம் ; இது கண்டத்தானமாகும். அதன்கீழிடப்பகுதி ஐந்தவத்தை, ஐங்கோசம் இராகாதி பதின்மூன்று குணங்களுமாகும். இது இருதயம் ; அதன் கீழ்ப்பகுதி தசேந்திரியமும் நாபித்தானமுமாகும் ; அதன்கீழுள்ள அச்சு பஞ்சபூதம் குண்டலி சத்தித்தானம் என்பனவாகும் ; சக்கரங்கள் தசவாயுக்களும் இருகால்களுமாகும் ; இவ்வாறு தேரானது பிண்டவடிவமாகும்.

ஆகவே சக்கரங்களாகிய தசவாயுக்களை நிறுத்த அசைதல் முதலிய வினைகள் ஒழியும். சீவன் தன்மனத்தை முறையே மேலாகவிளங்கும் உந்திக்குண்டலியிலிருந்து நாபிக்கும், பின் இருதயத்துக்கும், அங்கிருந்தும் கண்டம் வாய், நாசி, இருகண், இவைகளின் வழியாக மேனோக்கி லயப்படுத்தி அங்கிருந்து ஆறும் அடுக்காகிய புருவமத்தியத்திலும், அங்கிருந்து ஏனைய அடுக்குகளாகிய மஸ்தக அந்தம் மத்தி ஆதித்தானங்களிலும் துவாதசாந்தத்திலும் லயப்படுத்தி, அங்கிருந்து உச்சிக்குடையாகிய பிரமரந்தரத்தில் ஏற்றிலயப்படுத்திப் பரமானந்தரூபியாக வேண்டுமென்பதை இரதம் சூசிப்பிக்கிறது.

மற்றொருவகையில் தேர் சரீரம் ; நான்கு சிங்கங்களாவன: லோப குரூரம், சர்வவித ஆசைப்பெருக்க சங்கற்ப விருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார கோபதாப விகாரம் என்னும் நான்குவித கர்மவிருத்திகள் ; எட்டுயாளிகள், அஞ்ஞானம் அபிமானம் ராகாதிகுணம் துக்கம் விடயவாசனை நானாவிதகன்மம் உபாதி அவஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்கள் ; கொடிகள் தத்துவக் கூட்டங்கள் ; மணிகள் பீஜமந்திர பிரணவாதி

சத்தங்கள்; குஞ்சங்கள் 84 லக்ஷ யோனி பேதங்களில் மாறி மாறித் தோன்றும் மரணாவஸ்தை என இவ்வாறு கொள்ளவும்.

எனவே சிங்கங்களையொத்த தர்ம விருத்திகளையும், யாளிகளைப் போன்ற அனுபவங்களையும், கொடிகளைப்போன்ற தத்துவக்குழாங்களையும், மணிகளைப்போன்ற வாக்கொலிகளையும், குஞ்சங்களைப்போன்ற மனச்சலனங்களையும், இல்லையென்னும்படிச்செய்து, சித்திரதீபம்போல நின்று மோன சாட்சாத்கார நிலையை அடையவேண்டுவதைத் தேர் குறிக்கின்றது என அறிக.

இவ்வாறு சிவாலயம் சிவபிரானருட் டொழில்களை உணர்த்துதலை அறிக.

---

# கும்பாபிடேகம்.

## பிம்ப கும்பங்கள்.

சைவசமயிகளல்லாத ஏனைய சமயிகள் வைத்து வணங்கும் விக்கிரகங்கள் அவரவர் சமயக் கொள்கைகளின் உயர்ந்த தத்துவங்களை உணர்த்து முறையில் இல்லை. அவைகளுக்குச் சிறந்த தெய்வீக மந்திர சமஸ்காரங்களுமில்லை.

சைவ சமயிகள் வணங்குகிற விக்கிரகங்களோ அவ்வாறன்று. அவைகள் அச்சமயத்தின் சிறந்த உண்மைத் தத்துவங்களைத் தமது தோற்றத்தாலேயே போதிப்பனவாகும்.

சைவ சமயத்தின் உண்மைத் தத்துவங்களாவன :—
கடவுள் தமக்கொப்புயர்வற்றவர்; ஆண் பெண் அலியல்லாதவர்; உயர்திணை அஃறிணையின்பாற் படாதவர்; பராசத்தி, அருட்சத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திகளோடு கூடியவர்; பேரருளுடையவர்; பரந்த நோக்கமுடையவர்; சர்வ வியாபகர்; மாயையைத் தமதிஷ்டத்துக்கு

இயக்குபவர் ; நித்தியர் ; இன்ப அன்பு வடிவினர் ; வரம்பி லின்பமுடையவர் ; தேஜோரூபர் ; சர்வவல்லமையுடையவர் ; அஞ்ஞானத்தை அடக்குபவர் என்பனவாதிகளாம்.

இவ்வுண்மைத் தத்துவங்களை விநாயகர் வடிவத்தில் ஆராய்வோம்.

1. ஒப்புயர்வற்றவரென்பதை விநாயகரென்ற பெயரா லறிகிறோம் ; விநாயகர் தமக்குமேலொருவ ரில்லாதவர். 2. ஆண் பெண் அலியல்லாதவர் என்பதை ஒற்றைக் கொம்பு உணர்த்துகின்றது : ஆணென்றால் இருகொம்பு வேண்டும் ; பெண்ணென்றால் கொம்பில்லாதிருத்தல்வேண்டும் ; அலி என்றால் மதமில்லாதிருத்தல் வேண்டும். விநாயகருக்கு மத முளதெனச் சைவநூல் கூறும். 3. பரையாதி பஞ்சசத்திகளை உடையவரென்பதை அவரது ஐங்கரங்கள் குறிக்கும். அவ் வைங்கரங்களாலும் ஐந்து மலங்களையு மழித்தலால் அவை களைச் சத்தியென்றது. 4. பேரருளுடையவரென்பதைத் துதிக்கை உணர்த்தும் ; கொடுத்தற்காக எவரிடத்துமில்லாத நீண்ட கரமுடையவரா யிருத்தலால். 5. பரந்த நோக்க முடையவர் என்பதை அவரது சிறிய கண்கள் குறிக்கும். பரந்த நோக்கம் எங்கும் நோக்கும் நோக்கம். குறுகியகண் மிகத்தூரமாக நோக்குமென்பதைத் தூரதிருஷ்டிக் கண் ணடிகளால் அறியலாம். 6. சர்வவியாபகர் என்பதை அவ ருடைய பெருவயிறும், பெருங்காதும் குறிக்கும். பெருவயிறு சர்வலோகங்களையுந் தன்னகத்தடக்கியது. பெருங்காது எந்த உலகத்திலிருந்து குறையிரந்தாலுங் கேட்கவல்லது. 7. மாயை யைத் தமதிஷ்டத்துக்கு இயக்குபவர் என்பதை அவரது அரவக்கச்சு உணர்த்தும். அரவம் மாயையைக் குறிக்கும். 8. நித்தியர் என்பதை அவருடைய குறுந்தாளுணர்த்தும். (குறுந்தாள் - சிறுதாள், குட்டைக்கால்.) அதனல் அவருக்குப் பிள்ளையாரென்ற திருநாமமுண்டு. பிள்ளையார், என்றும்

பிள்ளையாராதலின் நித்தியரானர். 9. இன்ப அன்பு வடிவர் என்பதை அவரது பிரணவமுகம் குறிக்கும். முகம் பிரணவம் போன்றிருத்தலை ஆழ்ந்து நோக்கவும். பிரணவமானது சிவபீஜ சத்தி பீஜாக்கரங்கள் சேர்ந்த எழுத்தாதலாலும், சிவம் இன்பமும் சக்தி அன்பும் ஆதலாலும், பிரணவமுகம் சிவசத்திசொரூபத்தைக் குறிக்கும் இன்ப அன்பு வடிவாகும். 10. வரம்பிலின்பமுடையவர் என்பதை அவரது பிறைச் சந்திரன்குறிக்கும். சந்திரன் அமுதகலையோடு கூடியதாதலாலும் விநாயகர் திருமுடியில் விளங்குவது ஞானசந்திரகலையாதலாலும் பிறைச்சந்திரன் இன்பந்தரும் பொருளாதலை அறிக. 11. தேஜோரூபர் என்பதை அவரது சோமன், சூரியன், அக்கினி என்னும் மூன்று கண்களும் செம்மேனியும் குறிக்கும். சோமன் இடதுகண், சூரியன் வலது கண், அக்கினி நெற்றிக்கண். 12. சர்வவல்லமையுடையவர் என்பதை அவரது பாசம், அங்குசம் என்னும் ஆயுதங்கள் குறிக்கும். அவைகள் தமது ஆணை வழி நில்லாதவரைக் கட்டி அடக்கி நிறுத்தும். 13. அஞ்ஞானத்தை அடக்குபவர் என்பதை அவரது மூஷிகவாகனம் உணர்த்தும். மூஷிகத்தைத் தமது திருவடியின் கீழ்வைத்து, அதன் வலியை அழித்து நிற்றலால், அது துணியப்பெறும். அஞ்ஞானத்தைச் செய்யும் ஆணவமானது, முத்தியில் முதல் அழியாது தனது வலி யழிந்து நிற்குமென்ற சிறந்த சைவ சித்தாந்தக் கொள்கையை இது வலியுறுத்தலைக் காண்க.

இவ்வாறே சிவலிங்கம், தக்ஷிணமூர்த்தம், ஷண்முக மூர்த்தம் முதலிய திருவுருவங்கள் ஒவ்வொன்றும், சைவ சமயத்தின் உண்மைத் தத்துவங்களைப் போதிப்பதாகும். ஈண்டு விரிக்கிற் பெருகும்; சைவநூல்களிற் கண்டுகொள்க.

மேலும் கடவுளுக்குரிய அருவம், அருவுருவம், உருவம் எனும் மூவடிவங்களும், சிவாலயத்தில் ஒவ்வொரு

விக்கிரகபூசையிலும் வழிபடப்படுகின்றன. அருவவழிபாடு மந்திரமயமான வடிவங்களைக் கற்பித்துச் செய்யும் வழிபாடாகும். அருவுருவ வழிபாடு கும்பங்களிற் செய்யும் வழிபாடாகும். உருவவழிபாடு பிம்பங்களிற் செய்யும் வழிபாடாகும். (பிம்பம் விக்கிரகம்.)

இதுகாறும் விக்ரகங்கள், அல்லது பிம்பங்கள், கடவுளின் உண்மைத் தத்துவங்களை உணர்த்து முறையை அறிந்தோம். இனி அருவவடிவ வழிபாட்டிற் கொள்ளப்படும் மந்திரமய வடிவத்திற் காணப்படும் உண்மைகளை ஆராய்வோம்.

சிவபிரான் வழிபாட்டிற் கொள்ளப்படும் மந்திரவடிவிற்கு அங்கமான முக்கிய மந்திரங்களாகிய, ஈசானம் தத்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோஜாதம் என்னும் ஐந்து பிரமமந்திரங்களும் ஐந்து சிரசாகும். இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அத்திரம் எனும் மந்திரங்கள் சாங்க, உபாங்க, பிரத்தியங்கங்களாகும். இவற்றுள் ஒவ்வொரு மந்திரத்தாலும் அறியக் கிடக்கும் உண்மைகளை ஆராய்வோம். ஈசானம் என்பது ஈஶ எனும் தாது அடியாகப் பிறந்தது. ஈஶ என்ற சப்தத்துக்கு ஆளுதல் என்று பொருள். ஈசானம் என்பது சர்வலோகங்களையும் சர்வ ஜீவர்களையும் ஆளுபவர் என்பதாகும். இதுவே கடவுட்டன்மைக்கு முக்கியமான சுதந்தரத்துவத்தைக் குறிப்பதால், இது உச்சிச் சிரசு அதாவது மேல் சிரசு எனப்பட்டது. தத்புருஷம் என்பது உயிருக்கு உயிராக விருத்தலைக் குறிப்பது; இது சர்வ வியாபகத்தைக் குறிக்கும். இதனால் அவரது இயற்கை யுணர்வு முற்றுணர்வுகள் துணியப்படும். அகோரம் என்பது அஞ்ஞானத்தை அழித்தல்; கோரம் என்பதற்கு அஞ்ஞானம் என்று பொருள். அகோரமாவது அஞ்ஞானமில்லாமை. இது அவரது அளவிலாற்றலையும் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினமையையும் குறிக்கும். வாமதேவம்

என்பது அவரது பேரழகைக் குறிப்பது; இது அவரது தூய உடம்பைக் குறிக்கும். சத்தியோஜாதம் என்பது அவர் சக்தியுடனிருத்தலையும், சக்தியால் சர்வத்தையும் தோற்று வித்தலையும் குறிக்கும். இதனால் அவரது பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, சர்வ வல்லமையுடைமை துணியப் பெறும். இருதயம் அஸ்தித்துவத்தைக் குறிக்கும்; அஸ்தித்துவம் என்பது உள்ளதாந் தன்மை. எனவே நித்தியர் என்பது துணியப்படும். சிரசு நித்யத்துவத்தைக் குறிக்கும். சிகை சுதந்திரத்துவத்தைக் குறிக்கும். கவசம் இரட்சித்தலைக் குறிக்கும். நேத்ரம் சுகதுக்க ரூபமாகிற சக்தியைக் குறிக்கும். அஸ்திரம் அஞ்ஞானத்தை அழிக்குஞ் சக்தியைக் குறிக்கும், இவ்வாறு மந்திர வடிவிற் காணப் பெறும் உண்மைகள் ஒருவாறு சுருக்கிக் காட்டப்பெற்றன.

இனி அருவுருவ வடிவமாகிய கும்பத்தைப் பற்றி ஆராய்வோம்.

## கும்பம் சிவசொரூபம்.

கும்பமானது சிவலிங்கத்தைப் போலவே ஷடத்வா வடிவா யிருத்தலாலும், சர்வ சக்தி சொரூபமா யிருத்தலாலும், சர்வ தீர்த்தங்களை யுடைமையாலும், சர்வ தேவதா சொரூபமா யிருத்தலாலும், சிவ சொரூபமாகும்.

### (க) கும்பம் ஷடத்துவா வடிவமா யிருத்தல்.

சிவலிங்கத்தில், சாந்தியாதீத கலை திருமுடியும், சாந்தி கலை முகமும், வித்தியாகலை மார்பும், பிரதிட்டாகலை குய்யமும், நிவர்த்திகலை முழந்தாளுமாகும்; புவனம் உரோமமாகும்; வர்ணம் துவக்காகும்; மந்திரம் இரத்தமாகும்; பதம் நரம்பாகும்; தத்துவம் என்புந் தசையுமாகும்.

கும்பத்தில், கும்ப வஸ்திரம் தோலும், கும்பத்தின் மேலே பூசிய செம்மண் இரத்தமும், கும்பத்து மண் மாமிச

மும், கும்போதகம் மேதையும், கூர்ச்சம் எலும்பும், கும்பத்தின்மேற் சுற்றிய நூல் நரம்பும், கும்பரத்தினமும் சுவர்ண புஷ்பமும் சுக்லமும், நரம்புகளும், நியாச மந்திரங்கள் உயிருமாகும். இங்ஙனம் கூறிய சப்த தாதுக்களை முன்சொன்ன முறையில் ஆறத்துவாக்களிலும் வைத்துணர்க.

கும்பத்தின் அடியில் ஆத்ம தத்துவமும், நடுவில் வித்யா தத்துவமும், முடியில் சிவதத்துவமும் பூசிக்கப் பெறும் என அறிக.

(உ) கும்பம் சர்வ சக்தி சொரூபமாயிருத்தல்.

கும்பத்துள் போடப்பெற்ற நவரத்தினங்களில், நடுவில் உள்ள இரத்தினம் மனோன்மணியும், கிழக்கிலுள்ள வயிரம் வாமையும், அக்கினிதிக்கிலுள்ள வைடூரியம் ஜ்யேஷ்டையும், தெற்கிலுள்ள கோமேதகம் இரௌத்திரியும், நிருதியிலுள்ள புஷ்பராகம் காளியும், மேற்கிலுள்ள பதுமராகம் கலவிகரணியும், வாயுவில் உள்ள இரத்தினம் பலவிகரணியும், வடக்கிலுள்ள மாணிக்கம் பலப்பிரதமனியும், ஈசானத்திலுள்ள நீலம் சர்வபூததமனியுமாகும். கும்பஜலத்தில் போடப்பெறும் குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம்,ஏலம், கிராம்பு,குங்குமம், கற்பூரம், ஜாதிப்பத்திரி, கஸ்தூரி, கோரோசனம் என்னு மிவைகளின் பொடியும் நவசக்திகளாகும். லம்ப கூர்ச்சத்தின் அடி நடு முடிகள் இச்சை ஞானம் கிரியை எனும் சக்திகளாகும். லம்பகூர்ச்சமென்பது கும்பத்தின் மேலேயுள்ள தேங்காயின் மேலே போடப்பெறும் கூர்ச்சமாம். கும்பத்தின்மேல் சுற்றியிருக்கும் நூலிலுள்ள மூவிழைகளும் ஸரஸ்வதி, லக்ஷ்மி, ரௌத்ரி எனும் சக்திகளாகும். கும்பப்புகை ஹர்ஷணி எனும் சக்தியாகும். ஹர்ஷணி வருணன் சக்தி. இவ்வாறு கும்பம் சர்வசக்தி சொரூபமாயிருத்தலைக் காண்க.

(௩) கும்பம் சர்வ தீர்த்தங்களை உடைத்தாயிருத்தல்.

கும்பத்தில் உத்தமோதகத்தை நிறைத்து, கும்பத்தில் கிழக்கு முதல் ஈசானமீறாகக் கங்கை முதல் குமரியீறாக எட்டு புண்ணிய தீர்த்தங்களும் கும்பமத்தியில் வருணனும் மாவிலையில் கங்கையும் பூசிக்கப்பெறுவதால் கும்பம் சர்வ தீர்த்தங்களை உடையது.

(௪) கும்பம் சர்வ தேவதாசொரூபமா யிருத்தல்.

கும்பத்துள் போடப்பெறும் சுவர்ண புஷ்பம் என்னும் தங்கத்தாமரை சதாசிவமும், கூர்ச்சத்தின் அடி நடு முடிகள் பிர்மா விஷ்ணு ருத்திரர்களும், யஞ்ஞசூத்திரங்களுள் ஈசானம் ஈசானரும், கிழக்கு தத்புருடரும், தெற்கு அகோரரும், வடக்கு வாமதேவரும், மேற்கு சத்தியோ ஜாதருமாம். இக் கூர்ச்சம் நுனியுள்ள 50 தர்ப்பைகளாலே நீளம் 20 அங்குலமும், முடிச்சு 4 அங்குலமும், முடிச்சின் நுனி 3 அங்குலமுமாகக்கொண்டு, முடிச்சின்கீழ் ஒரு தருப்பையாற் கட்டப்பெறுவதாகும். கும்பத்தின் மேலுள்ள தேங்காய் உருத்திரனும், மாவிலை கங்கையும், கும்பத்தின் கீழே ஆசனமாகப் போடப்பெறும் சப்ததானியங்களில் யவை இடபமும், அரிசி குமரனும், உளுந்து அக்கினி தேவனும், கோதுமை சந்திரனும், துவரை குபேரனும், பாசிப்பயறு வருணனும், எள் தேவியுமாகும். இவ்வாறு கும்பம் சர்வதேவதா சொரூபமாயிருத்தலைக் காண்க.

## யாக சாலை.

யாகசாலா என்ற வடமொழிச் சொல்லில் உள்ள, யகரம் யக்ஞத்தையும், அகரம் செல்லுதலையும், ஶகரம் சுகத்தையும் லகரம் லயத்தையும் குறிப்பதால், யாகசாலை என்ற சொல்லுக்கு ஞான யாகத்தால் லயத்தானத்தில் சுகத்தின் பொருட்

டுச் செல்வது என்று பொருளாகும். எனவே ஞான யாகம் செய்வதற்குரிய ஸ்தானம் யாகசாலையாகும்.

யாகசாலை, ருத்ர சூத்ரம், விஷ்ணு சூத்ரம், பிர்மசூத்ரம், கண சூத்ரம், கலா சூத்ரம், மனுசூத்ரம், ரவி சூத்ரம், பங்க்தி சூத்ரம் என எண்வித பேதமாகும். பங்க்தி சூத்திரத்துக்குத் தச சூத்திர மெனவும் பெயர்.

உருத்ர சூத்ரம் 64 அல்லது 44 சூத்ரங்களும், விஷ்ணு சூத்ரம் 34 சூத்ரங்களும், பிர்ம சூத்ரம் 24 சூத்ரங்களும், கணசூத்ரம் 18 சூத்ரங்களும், கலா சூத்ரம் 16 சூத்ரங்களும், மனுசூத்ரம் 14 சூத்ரங்களும், ரவி சூத்ரம் 12 சூத்ரங்களும், பங்க்தி சூத்ரம் 10 சூத்ரங்களுமாகும். ரவி தச சூத்திரங்கள் பிரதிஷ்டைக்கு ஆகா. உருத்ர சூத்ரத்துக்கு 33 குண்டங்களும், விஷ்ணு சூத்ரத்துக்கு 25 'குண்டங்களும், பிர்ம சூத்ரத்திற்கு 17-ம், கண சூத்ரம், கலா சூத்ரம், மனு சூத்ரம் எனும் மூன்றிற்கும் தனித்தனியே 9-ம், ரவி சூத்ரத்திற்கு 5-ம், தச சூத்ரத்திற்கு 1-ம் போடவேண்டும். இவைகளுக்குரிய துவாராதி வகைகளையெல்லாம் சிவாமகங்களிற் கண்டுகொள்க.

யாகசாலையில், கிழக்கில் நாற்கோண குண்டமும், அக்னி திக்கில் அரசிலைக் குண்டமும் (யோனிகுண்டம்), தெற்கில் அர்த்த சந்திரகுண்டமும், நிருதியில் திரிகோண (முக்கோண) குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும், வாயுதிக்கில் அறுகோண குண்டமும்,வடக்கில் பத்ம குண்டமும், ஈசானத்தில் எண்கோண குண்டமும், ஈசானத்துக்கும் கிழக்குக்கும் மத்தியில் பிரதான குண்டமும் போடப்பெறும்.

நாற்கோண குண்டம் பிருதிவி தத்துவமாகும். அரசிலைக்குண்டம் நியதிமாயா தத்துவமாகும். அது சிவனைக் குறிக்கும். அர்த்த சந்திரகுண்டம் அப்பு தத்துவமாகும். முக்கோணகுண்டம் தேயு தத்துவமாகும். அறுகோணகுண்டம்

வாயு தத்துவமாகும். விருத்தகுண்டம் ஆகாயதத்துவமாகும். பத்மகுண்டம் கலாதத்துவமாகும். இது சூரியனைக் குறிக்கும். எண்கோணகுண்டம் கால தத்துவமாகும். இது சந்திரனைக் குறிக்கும். விருத்தகுண்டமாகிய பிரதான குண்டம் சிவதத்துவமாகும். இது சிவபிரானைக் குறிக்கும். ஆதலால் யாகசாலையானது 36 தத்துவ சொரூபமானதும் சிவபிரானது அஷ்ட மூர்த்த வடிவமானது மாகும்.

இங்ஙனம் கூறிய நாற்கோணமாதிய குண்டங்களில், முறையே அஷ்ட மூர்த்திகளாகிய க்ஷமாமூர்த்தி, மகாதேவர், சர்வர், ஈசானர், பசுபதி, உருத்ரர், உக்ரர், பீமர், எனுமிவர்களும் முறையே இவர்களுக்கு மூர்த்திமான்களான தற்புருஷர், இருதயமூர்த்தி, அகோரர், சிகாமூர்த்தி, கவசமூர்த்தி, சத்யோஜாதர், வாமதேவர், சிரசுமூர்த்தி, பரசிவம் எனும் இவர்களும் பூசிக்கப் பெறுவார்கள்.

இனி குண்டங்களில் பூசிக்கப் பெறும் அக்கினி வகையாவது :—அக்னியானது வைசுவா நராக்கினி, சிவாக்கினி என இருவகைப்படும். வைசுவா நராக்கினி தேவதாத்மக பாவமில்லாது ஜாடராக்கினி ரூபமுடையதாகும். சிவாக்கினி தேவதாத்மக பாவமுடையதாய்ச் சிவரூபமா யிருக்கும். யாகம் கர்மயாகம் ஞானயாகமென இருதிறப்படுவதால், கர்மயாகத்தில் வைசுவாநராக்கினியும் ஞானயாகத்தில் சிவாக்கினியும் பூசிக்கப் பெறும். வைசுவாநராக்கினி வைதிகாக்கினி எனவும் பெயர் பெறும். பிரணீதி பிரம கூர்ச்சங்களோடு கூடியது வைதிகாக்கினி. இதற்கு ஆவரணங்களில்லை. சிவாக்கினி பஞ்சாவரணங்களோடு கூடியது. பிரணீதி பிரமகூர்ச்சங்கள் சிவாக்கினிக்கு இல்லை. வைதிகாக்கினிக்கு அதிஷ்டாதா பிரமா. சிவாக்கினிக்கு அதிஷ்டாதா சிவன். நாற்கோண குண்டத்தில் ஆஹவனீயாக்கினியும் அர்த்த சந்திர குண்டத்தில் தக்ஷிணாக்கினியும், விருத்தகுண்டத்தில் காருஹபத்தியாக்கினி

யும், அறுகோண குண்டத்தில் பாலாக்கினியும், திரிகோண குண்டத்தில் யெளவனுக்கினியும், யோனிகுண்டத்தில் விருத்தாக்கினியும், பத்மகுண்டத்தில் கேவலாக்கினியும், எண் கோண குண்டத்தில் சாமான்யாக்கினியும், பிரதான குண்டத்தில் சிவாக்கினியும், என ஒன்பது அக்னியும் ஒன்பது குண்டங்களில் ஸ்தாபிக்கப்பெறும்.

நாமகரணம்வரை ஸம்ஸ்கரிக்கப்பெறுவது பாலாக்னியும், உபநயனம் வரை ஸம்ஸ்கரிக்கப்பெறுவது யெளவனுக்கினியும், விவாகம் வரை ஸம்ஸ்கரிக்கப்பெறுவது விர்த்தாக்கினியுமாகும். சிவாக்னி அங்கியும் ஏனையவை அங்கமுமாகும்.

யாகசாலையில் போடப்பெறும் குண்டங்களும் தனித்தனியே ஒவ்வொன்றும் சிவ சொரூபமாகும் முறையைக் கூறுதும்.

குண்டங்கள் சிரசு, இருதயம், நாபி, கண்டம், யோனி, மேல்மேகலை, நடுமேகலை, கீழ்மேகலை, பரிஸ்தரணம் எனும் ஒன்பது உறுப்புக்களை உடையன. இவற்றுள் பரிஸ்தரணம் நீங்கலாக எட்டுறுப்பும் அஷ்டமூர்த்தி சொரூபங்களாகும். குண்டத்தில் சிரசு அக்னியாகும். குண்டநடுவிலுள்ள கர்ணிகையோடு கூடிய பத்மம் இருதயமாகும். அந்த பத்மத்துக்கு வெளியே வட்டவடிவமாய் மூன்றங்குல உயரத்தில் செய்யப்படுவது நாபியாகும். குண்டத்தின் உயரத்தில் நடுப்பாதியில் ஓர் அங்குலத்தில் கர்ணம் கங்கணம்போல் செய்யப்பட்டது கண்டமாகும். கண்டத்தின்கீழ் இரண்டங்குல நுனியும் கண்டத்தின்மேல் மேல் மேகலை பரியந்தம் நீண்டு, மேல் மேகலையில் அரசிலையி னடிபோல் நாலங்குல அகலமும், இரண்டு அல்லது ஓரங்குல உயரமும் உள்ளதாகச் செய்யப்பெறுவது யோனியாகும். இது கண்ட பரியந்தம் நீண்டு 12 அங்குல நீளமுடையதாகவும் செய்யப்பெறலாம். குண்டவடிவில் மேலும் அதன் கீழும் அதன் கீழுமாக முறையே 4,

3, 2, அங்குல உயரமும் அகலமுமாகச் செய்யப்பெறுவது மேகலைகளாகும்.

யோனி குண்டத்திற்கு யோனியும் பத்மகுண்டத்திற்கு இருதயகமலமும் இரா.

பரிஸ்தரணமாவது குண்டத்தைச் சுற்றிப் போடப் பெறும் தர்ப்பைகளாகும். இவை பசுமையான 30 தர்ப்பை களினாலே சடைபோல் பின்னப்பட்டதாய் அல்லது முறுக் கப்பட்டதாய் ஓரங்குல அளவில் வலமாகப் போடப்பெற்ற முடியையுடையதாக இருக்கவேண்டும். பரிஸ்தரணம் விஷ் டரம் என்றும் சொல்லப்பெறும்.

இனி குண்டத்தில் சாங்க உபாங்க பிரத்தியங்கங்க ளாவன: அக்கினி சாங்கமும் மேகலைகள் உபாங்கமும் பரிஸ் தரணம் பிரத்தியங்கமுமாகும். இனி குண்டத்தில் பஞ்சா வரணங்களைக் கூறுதும்:—முதலாவரணம் அக்னி; இரண்டா மாவரணம் மேன்மேகலை; மூன்றுமாவரணம் நடுமேகலை; நான்காமாவரணம் கீழ்மேகலை; ஐந்தாமாவரணம் பரிஸ்தரண மாகும். இவ்வாறு குண்டங்கள் சிவ சொரூபமும் சிவாலய சொரூபமுமாயிருத்தலை அறிக.

இனி யாகத்தில் உபயோகப்படுத்தப்பெறும் ஓமசாதன மான சிருக்கு சிருவம் என்னுங் கருவிகளில் சிருக்கு என் பது கலசம், கண்டிகை, வேதிகை, கண்டம், முகம், பிலம், மேகலை, ஆஜ்யஸரணி (நெய் விழுமார்க்கம்), தண்டம் எனும் உறுப்புக்களையுடையதாகும். சிருவமாவது விருத்தம், நெய்த் தாரை, கண்டிகை, புஷ்கரங்களோடு கூடியதாகும்.

## ஞான யாகம்.

யாகமானது இராஜசூயம், அஸ்வமேதம், புத்ர காமேஷ்டி முதலாகப் பலவிதமாகும். அவைகள் போகங்களை மட்டும் பயத்தலால் போககாமியார்த்தம் செய்யப்பெறுவன.

சிவாலயத்தில் நித்தியத்திலும், நைமித்திகத்திலும், கும்பாபிடேகத்திலும் செய்யப்பெறும் யாகமானது போகமோக்ஷங்களைப் பயந்தாலும், சிறப்பாக மோக்ஷத்தையே குறித்தலால் அது ஞானயாகமெனவும் சிவயாகமெனவும் பெறும்; அது ஆன்மாவைப் பாசத்தினின்றும் நீக்கிப் பதியிற் சேர்ப்பதாதலால் ஞானயாகமெனப் பெற்றது. இன்னும் யாகமானது தூலம் சூக்குமம் என இருவகையாகும்: தூலயாகம் கருமயாகமும், சூக்குமயாகம் ஞானயாகமுமாகும்.

கருமயாகம் காயிகம், வாசிகம், மானதமென மூன்றாகும். காயிகமாவது நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்றும். வாசிகமாவது மந்திரசெபங்களாகும். மானதமாவது தெய்வத்தியானமாகும்.

ஞானயாகம் அகத்தே அறிவுமாத்திரையாற் செய்யப்பெறுவதாகும். இதுவும் சிவாலயத்திற் செய்யப்பெறுவதே.

புறத்தே செய்யப்பெறும் யாகத்துக்கு வேதி, அந்தர்வேதி, துரோணகலசம், சிருக்கு சிருவம், சூக்தவாகம், யுவாகம், யூபம், பசு, தர்ப்பை, யாகபாத்திரங்கள், அவிசு முதலிய யாகோபகரணங்கள் வேண்டப்படும். அறிவுமாத்திரையாற் செய்யப்பெறும் ஞானயாகத்தில் இவை நிற்குமாறு காட்டுதும்:—சரீரம் வேதி, மூக்கு அந்தர்வேதி, தலை துரோணகலசம், பாதம் இரதம், இடக்கை நெய்ப்பாத்திரம், வலக்கை சுருவம், புலன்கள் சபையினர், பிரயாசை மகாபூதங்கள், பல்லும் உதடும் சூக்தவாகம், நாக்கு யுவாகம், தயை மிருதி, ஓங்காரம் யூபம், ஆசை இரசனை, மனம் இரசம், காமம் பசு, மயிர் தர்ப்பை, இந்திரியங்கள் யாகபாத்திரங்கள், கன்மேந்திரியங்கள் அவிசு, எவற்றையும் விடுதலே தட்சிணை, கொலை செய்யாமை யாகம் என உணர்க.

## கும்பாபிடேகம்.

இதுகாறும் கூறியவகையில் சிவாகாரமாக அமைக்கப் பெற்ற யாகசாலையில் சிவாகாரமான அக்னியிலெழுந்த புகையும், வெப்பமும், வேதவோசையும், சிவாகம தோத்திர ஓசையும், திருமுறை யோசையும், சிவனடியார்கள் தோத்திர ஓசையும், சிவாசாரியர் சாதகர் முதலியோர் சிவமந்திரக் கிரியாபாவனைகளோடு செய்யும் செயல்களும், உத்தம மெய்யன்பர் நல்லெண்ணங்களும் சேர்ந்து, எங்கும் வியாபித்திருக்கிற இறைவனது அருட்சக்தியைத் தூண்டி எழுப்பிக், கும்பத்தின் மேலும் உள்ளுமிருக்கும் தெய்வ மின்சாரத்தை நடத்தும் பொருள்களான மாவிலை தர்ப்பைகளினால், கும்போதகத்தில் பிரகாசிக்கச் செய்யவே, அது தெய்வீக சக்திக் கலைகள் நிரம்பியதாகும். இக்கும்பம், முன்னமேயே பிம்பத்திலிருந்த சிவசக்திக் கலைகளைத் தர்ப்பைக் கயிற்றின் வழியாக ஆகர்ஷணஞ் செய்யப்பெற்றிருத்தலாலும், தெய்வீக சிவமந்திரங்களினாலே நியசித்துப் பூசிக்கப் பெற்றிருத்தலாலும், சிவமேயாகும். உதகம் மின்சாரத்தை நடத்துமா பொருள்களிலொன்று. ஆதலால் மந்திர முதலிய பலவகைகளினாலும் பிரகாசிக்கப் பெற்ற சிவ கலைகளை, மின்சாரத்தை நடத்தும் சக்தி வாய்ந்த தர்ப்பைக் கயிற்றின் வழியாகப் பிம்பங்களில் சந்தானம் செய்து மேற்கண்ட கும்போதகத்தை அபிடேகித்தலே கும்பாபிடேகமாம்.

## கும்பாபிடேகம் பெருஞ் சாந்தி.

சாந்தி என்பது பிராயச்சித்தம். அது மன வாக்குக் காயங்களினால் அறியாது செய்த தீவினைகளின் தீர்வைக் குறித்து அநுஷ்டிக்கும் சாந்திராயணம் கிரிச்சரம் முதலிய விரதங்களும், தலம் தீர்த்தம் மூர்த்தி சேவைகளுமாகும். ஒருவன் செய்த தீவினைக்கு நல்வினையால் தீர்வுண்டென்பதைப் பின் வரும் செய்யுளாலறிக.

உற்றதொழி னிணைவுறாயி லிருவினையு முளவா
மொன்றொன்று வழியாது மொழியா தன்னின்
மற்றிவற்றி னொருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரு மாபி னாற்றப்
பற்றியது கழியுமிது விலையா லேற்கும்
பான்மையுமாம் பண்ணுது பலிக்கு முன்னஞ்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சோருஞ்
சோராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே.

—**சிவப்பிரகாசம்.**

தீவினைகளுளெல்லாம் தலையாயது சிவாபராதமாகும். சிவாபராதமாவது சிவபிரான் தனக்குச் செய்த உதவிகளைக் குறித்து நாடோறும் அவரைச் சிவாலயத்திற்குச் சென்று சிவாகம நெறிப்படி வழிபடாமை முதலியனவாகும். அம்மட்டோ! நாடோறும் செய்துவரும் சிவாலய தரிசனத்தில் புத்தி அபுத்தி பூர்வகமாக நேரும் பிழைகளும் சிவாபராதமாகும்.

ஒருவன் அவனது வாழ்க்கையில் நாடோறும் அபுத்தி பூர்வகமாகச் செய்ய நேர்ந்த தீவினைகள் அன்றன்று செய்யும் சிவாலய தரிசனத்தால் தீரும். நாடோறும் தரிசிக்கும் நியமத்திற் பிழைத்தால் வரும் தீவினை உற்சவ தரிசனத்தால் தீரும். உற்சவ தரிசனத்திற் பிழைத்தால் நேரும் தீவினைகள் மகாகும்பாபிடேக தரிசனத்தால் தீரும். ஆகையால் வேறு எவ்வகையாலும் தீராத சிவாபராதங்களைத் தீர்க்கும் கும்பாபிடேகத்தைப், பெருஞ்சாந்தி என்று சைவநூ லுணர்ந்த பெரியோர் கூறுவர். இதுபற்றி நமது சமயாசாரியர்களி லொருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் தமது தமிழ் மறையில் இதனைப் பெருஞ்சாந்தியென்று திருவாய் மலர்ந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்

“ உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போக்கும்
இருஞ்சாக்கியர்க ளெடுத்து ரைப்ப நாட்டில்

கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்''
—திருமயிலாப்பூர் தேவாரம்

இதுகாறும் கூறியவாற்ருல் கும்பாபிடேகம் பெருஞ் சாந்தியாதலை உணர்க.

## கும்பாபிடேகப் பலன்.

புண்ணிய பூமியாகிய நமது பாரதபூமியில் உள்ள தலங் களும் தீர்த்தங்களும் பெரும்பான்மையோர் செய்யும் வைதிக வேள்வி முதலிய நல்வினைகளும் மக்களின் சிற்சில வினை களையே போக்கி போகமோக்ஷங்களைக் கொடுக்கும். அவை களாற் பெறும் போகம் ஒரு காலத்தில் அழிவுடையதாகும். அங்ஙனமே அவைகளாற் கிடைக்கப்பெறும் மோக்ஷம் சுவர்க் காதி லோக மோக்ஷமாகையால் அதுவும் நிலையுதலிலதாய் ஒரு காலத்திலழியும்.

கும்பாபிடேக தெரிசனத்தால் அடையும் போக மோக்ஷங்களோ அவ்வாறின்றி என்றும் ஒரு தன்மையாக நிலைபெறும் நித்யாநந்த மோக்ஷமாகும். போகமென்பது ஈண்டு சிவபோகமாகும். பிறந்திறந்துழலுந் தேவர்களால் கொடுப்பதற்கரிய போக மோட்சங்களைக் கொடுக்கின்ற ஒன்று, ஏனைய போகங்களையும் கொடுக்குமென்று சொல்ல வும் வேண்டுமோ ? யார் யார் எதை விரும்பினுர்களோ அவ ரவர் அதை அதை அடைவார்கள் என்பது நிச்சயம். ஆகை யால் கும்பாபிடேக தரிசனத்தால் தீவினைகள் நீங்கிப் புத் திரப்பேறு முதலான பேறுகளையும் சிவபக்தியையும் பெற் றுச் சிவானந்தானுபவமுறுவர் என்பது திண்ணம்! திண் ணம் !! திண்ணம் !!!

# கல்லிற் செம்பிற் கடவுளிருக்கை

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

கந்தையா என்பவன் ஒரு சைவ இளைஞன்; இலங்கையிலுள்ள ஒரு கிறிஸ்தவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் படிப்பவன். அவனுடைய அத்தை மகள் சிவகாமி என்பவள் சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் படிப்பவள். ஈஸ்டர் விடுமுறையில் ஒரு நாள் மாலை இருவரும் கீரிமலையிலுள்ள அழகிய நீர் நிலையிற் குளித்து விளையாடிய பிறகு கடற்கரையில் உல்லாசமாகச் சம்பாஷித்துக் கொண்டு குளிர்ந்த கடற்காற்றை உட்கொண்டு இன்புற்றிருந்தனர். தங்கள் கல்லூரிகளிற் போதிக்கப்படும் பல விஷயங்களைப்பற்றிப் பேசினுர்கள்; தங்கள் உபாத்தியாயர்கள் கற்பிக்கும் முறைகளை ஒப்பிட்டு மகிழ்ந்தார்கள்; பிள்ளைகளும் பெண்களும் கல்லூரியிற் செய்யும் நாகரிகக் குறும்புச் செயல்களை வருணித்து நகைத்தார்கள்; தங்கள் கல்லூரிகளில் நடைபெறும் சமயபோதனை முறைகளைப்பற்றிப் பேசத் தொடங்கினுர்கள்; பல உண்மைகளைப்பற்றிய கூர்ந்த நுட்பங்களை யுணர்ந்துணர்ந்து இறும்பூதெய்தினுர்கள்.

"அதெல்லாம் சரிதான். நீ என்ன சொன்னபோதிலும் கல்லையும் மண்ணையும் செம்பையும் கடவுளென்று வழிபடுவதை எனது பகுத்தறிவு ஒருபோதும் ஒத்துக்கொள்ளாது" என்றுன் கந்தையா.

"என்ன! என்ன!! உருவ வழிபாட்டை அவ்வளவு மூடத்தனமான பழக்கமென்று எண்ணி விட்டீர்? கிறிஸ்தவக் கல்லூரியிற் பழகிய வாசனுமலம் வேதனை செய்கிறதோ? உருவ வழிபாடின்றி எத்துறையிலும் வாழ்க்கையே நடைபெற முடியாதே! சமயத் துறையில் மாத்திரம் உருவ வழி

பாட்டை ஏன் புறக்கணித்தல் வேண்டும்?" என்றாள் சிவகாமி.

"நீ சொல்வது விசித்திரமாயிருக்கிறது! வாழ்க்கையில் வேறு சில துறைகளிலுள்ள உருவ வழிபாட்டைக் கூறு பார்ப்போம்" என்றான் கந்தையா.

"பள்ளிக்கூடத்தில் முதன் முதலாக எண்ணும் எழுத்தும் கற்பிப்பதிலேயே உருவ வழிபாடு அமைந்துள்ளதே!" என்றாள் சிவகாமி.

"விளையாடுகிறாயா? அது எப்படி அமைந்துள்ளது? சொல் பார்க்கலாம்" என்றான் கந்தையா.

"ஐந்தும் ஐந்தும் சேர்ந்தால் என்னவாகின்றது?" என வினவினாள் சிவகாமி.

"நமது வீட்டு வேலைக்காரி காத்தாயி மகன் ஐந்து வயதுள்ள கறுப்பண்ணன் கூடச் சொல்லி விடுவானே, ஐந்தும் ஐந்தும் பத்து. இதற்கு பி.ஏ. படிக்கவேண்டுமா?" என்றான் கந்தையா.

"ஐந்தும் ஐந்தும் ஒன்பதென்கிறார்களே! பத்தென்று எப்படிக் காட்டுவது?" என்று சிரித்துக் கொண்டே சிவகாமி சொன்னாள்.

கந்தையாவுக்குச் சிறிது கோபம் வந்தது. அதை அடக்கிக்கொண்டு "என்ன நீ கூடவோ இப்படி விளையாடுகிறது? நீ நன்றாகப் படித்த புத்திசாலிப் பெண்ணாயிற்றே. இதோ உனது இரண்டு கைகளையும் சேர்க்கிறேன்" என்று அவளுடைய இரண்டு கைகளையும் விரித்துச் சேர்த்து விரல்களை நீட்டி வரிசையாக நிறுத்தி "ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து" என்று விரித்த கைகளிரண்டையும் சேர்த்தும் பிரித்தும் மூன்று முறை எண்ணினான் கந்தையா.

"ஓ! ஓ!! என் கைவிரல்களைப் பிடித்து, ஒன்று சேர்த்து வரிசைப்படுத்தி எண்ணியல்லவோ பத்தென்று நிரூபித்தீர்! விரல் வழிபாடின்றி இதை நிரூபிக்க வில்லையே!" என்று நகைத்தாள் சிவகாமி.

"ஐந்து புளியங் கொட்டையும் ஐந்து புளியங்கொட்டையுஞ் சேர்த்து ஒன்றாகக் கொட்டி யெண்ணினால் பத்துப் புளியங் கொட்டையாகு மல்லவா?" என்றான் கந்தையா.

"என் விரல்களையோ புளியங் கொட்டைகளையோ உருவங்களாக வழிபட்டால் ஐந்தும் ஐந்தும் பத்து என்ற கருத்தை மெய்ப்பிக்க இயலும். எவ்வித உருவத்தின் உதவியும் இல்லாமல் இக்கருத்தை எப்படி விளக்குவீர்கள்?" என்றாள் சிவகாமி.

"5+5=10 என்று பலகையில் எழுதிக் காட்டுவேன்" என்றான் கந்தையா.

"ஐந்தும் ஐந்தும் பத்து என்று உரத்த குரலிற் கூவியே காட்டிவிடலாமே" என்றாள் சிவகாமி.

"என்னோடு சண்டையிடுவதற் கென்றே இன்று இங்கு வந்தாயா?" என்று கந்தையா கேட்டான்.

"ஐயோ, பாவமே! உருவ வழிபாட்டை உங்கள் பகுத்தறிவு ஒத்துக் கொள்ளவில்லை யென்று நீங்களே தொடங்கினதை மறந்து விட்டீர்களா?" என்றாள் சிவகாமி.

"ஓ! ஓ!! அதை எப்படித் தாபித்து விட்டாய்? ஐந்தும் ஐந்தும் பத்து என்று விரல்விட்டும் புளியங் கொட்டையெண்ணியும் காட்டுவதால் கடவுளை உருவத்தில் வழிபடுவது அறிவுடைய செயல் என்பது எவ்வாறு ஏற்படுகிறது?" என வினவினான் கந்தையா.

"அதைச் சொல்வதற்குத்தான் வாயெடுத்தேன். அதற்குள் உங்களுக்குக் கோபம் வந்துவிட்டது. உருவங்களின் உதவியைக் கொண்டே கருத்துக்களின் பழக்கம் ஏற்படும்.

விரல் விட்டு விட்டு எண்ணிப் பழகிய பின்னரே விரல் விடாமல் மனக் கணக்காகவே கூறும்பயிற்சி ஏற்படும். சில சூக்ஷம அறிவுடையவர்கள் லக்ஷஸ்தானப் பெருக்கல் வகுத்தலையும் வரிவடிவில் பலகையில் எழுதாமலே செய்கிறார்கள். பொருளாதாரத்துறையில் தலைவர்களாயிருப்பவர்கள் சட்ட திட்டங்களை யுண்டாக்கிப் பல தொழில் முறைகளையும் வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள். ஒரு நூறு ரூபா நோட்டு என்ற ஒரு காகித உருவம் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறது. அக்கருத்தை யறிந்த ஒரு வர்த்தகன் அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டுகிறான். ஒரு செங்கல்லைப் பெட்டியில் வைப்பதுமில்லை; பூட்டுவதுமில்லை. நூறு ரூபா நோட்டிலுள்ள கருத்தையும் அதை மக்கள் ஒப்புக்கொள்வதால் ஏற்படும் நன்மையையும் அறியாத ஒரு குழந்தை அதைக் கிழித்து வாயிற் போட்டுக் கசக்கித் துப்புகிறது. நூறு ரூபாய்களை வைத்துக் கொள்வது உருவத்தைச் சேமிப்பது; நூறு ரூபா நோட்டை வைத்துக் கொள்வது அருவுருவத்தைச் சேமிப்பது; பாங்கியில் "டிபாசிட்டுக்" கணக்கு வைத்துக் கணக்குப் புத்தகத்தையும் ரசீதையும் வைத்துக்கொள்வது அருவத்தைச் சேமிப்பது. இஃதேபோல் ஒவ்வொரு துறையிலும் பெருக்கிக் கொண்டே உதாரணங்களைக் காணலாம். கடவுள் என்ற கருத்தை வழிபடுவதற்குப் பல பொருத்தமான உருவங்களுண்டு. உருவங்களை வழிபடுவதால் ஏற்படும் பழக்கம் அருவுருவம், அருவம் என்பவைகளை வழிபடும் பழக்கத்தையுண்டாக்கும். இம்மூவகை வழிபாடும் கருத்தில் மனத்தை யிருத்துவதற்குத் துணை செய்யும். உருவவழிபாட்டில் நம்பிக்கையில்லாத சமயிகளுங்கூட மனதை ஒருமுகப்படுத்துவதற்குச் சில உபாயங்களைக் கொண்டுள்ளார்கள். அவை உரு

வங்களின் துணைகொண்டே கையாளப்படுகின்றன" என்றாள் சிவகாமி.

"சரி, போகலாம் வா, நாழிகையாய்விட்டது. நாளைய தினம் மேலும் இதைப்பற்றிப் பேசலாம். நீ சொல்வதில் ஏதோ உண்மை யிருப்பதுபோல் தோன்றுகிறது" என்றான் கந்தையா.

பிறகு இருவரும் கடற்கரையிலிருந்து தமது இருப்பிடம் சென்றார்கள்.

# இரிஷியூர்
# திருக்கோயில்கள் நிலைமை

[பி. தியாகராயன்]

**வணக்கம்**

தாழ்நிலை யெல்லையான் சாரினு முன்னருட் டாண்மறவா
வாழ்வதே யோங்கிட வந்தருள் கொன்றை மலர்விளங்கும்
தாழ்சடை மின்றாத் தங்கு மிருடைத் தலஞ்சிறக்கப்
பாழ்பட முப்புரம் பார்த்திடு முக்கட் பரம்பொருளே

1. எல்லை:—இரிஷியூர் என்னும் சிவனூர் சோழ நாட்டில் (தஞ்சைச் சில்லாவில்) தஞ்சை நாகை இருப்பு வழியிலுள்ள நீடாமங்கலம் என்னும் நிலையத்தின் தென்கிழக்கே ஏறக்குறைய மூன்று மைல் தூரத்தில் உள்ளது. காவிரியாற்றின் பெருங்கிளையாகிய வெண்ணியாற்றினின்று தோன்றும் வெண்ணியாறு (வெண்ணாறு), கோரையாறு, பாம்பணியாறு என்ற மூன்றில் இரண்டு கிளைகள் மாலை யணிந்தது போல் வெண்ணியாறு வடக்கும் கிழக்கும் ஓடி வருகின்றது. கோரையாறு மேற்புறம் ஓடித் தெற்கு எல்லையாக வளைந்து வருகிறது. இவ்வூர்க்கு மூன்று இருப்புவழி நிலையங்கள்

நெருங்கி யுள்ளன. கீழ்ப்புறமிருந்து வரவேண்டுமானால் கொரடாச்சேரி நிலையத்தில் இறங்கவேண்டும். மேற்கிலிருந்து வருபவர் நீடாமங்கலத்திலும், தெற்கிலிருந்து வருவோர் இராசப்பையன் சாவடியிலும் இறங்க வேண்டும்.

2. நிலவளம் :— மேற்சொன்ன ஆறுகளுக் கிடையே காணப்படும் ஒத்த பரந்தவெளியின் நடுவில் உள்ள ஒருதிடல் போன்றது இவ்வூர். ஆற்றங் கரையோரங்கள் மிகச் செழித்துச் சோலைகள் சூழ்ந்து இருக்கின்றன. ஊர்க்கும் ஆற்றங்கரைகளுக்கும் இடையிலுள்ள வெளியெல்லாம் நன்செய் நிலங்களே. பயிர் நாளில் காணுமிடமெல்லாம் பச்சைப் போர்வை போர்த்தாற்போலக் காணப்படும். கோடையில் வறண்டு, அறுவடையான வயல்கள் ஆற்றங் கரை வரைக்கும் வெட்ட வெளியாகத் தோன்றும். ஊருக்குள்ளே சில தெங்குகளும் புளியும், மூங்கிலுமே உள. வேறு வளமான மரங்கள் ஒன்றும் அடர்ந்து காணப்படமாட்டா. புன்செய்ப் புலங்களும் மிகமிகக் குறைவு.

3. நீர்வளம் :—பயிர்க் காலத்தில் காவிரியின் நீர்ப் பெருக்கால் வயல்களிலும் வாய்க்கால்களிலும் தண்ணீர் நிறைந்து காணப்படும். மழைக் காலத்தில் வெள்ளம் அடிக்கடி கேடு விளைத்தலுண்டு. கோடையிலும் குளங்களில் நீர் நிறைய உண்டு. அயல் ஊராரும் முழுகவும் குளிக்கவும் இங்குதான் வருவார்கள். ஊர் சிறியதாயினும் நான்கு நீர் நிலைகள் உடையது. கீழ்ப்புறத்தில் உள்ளதற்குத் திருக்குளம் என்று பெயர் ; காரணம் திருக்கோயிலுக்கு முன்னே இருப்பதனாலேயே. மேற்புறத்திலுள்ளதற்குக் "காசிநாதன் குளம்" என்று பெயர். முன்னொரு நாளில் ஒருவர் தம் தாயார் எலும்புகளைக் காசியருகில் கங்கையிற் போட எண்ணிப் போய்க் கொண்டிருந்தவர் இக்குளக்கரையில் தங்கி உணவு அருந்தினர். அப்பொழுது அவ்வெலும்பு முடிப்பை

அவிழ்த்துப்பார்த்தபோது மலராக இருப்பதைக்கண்டு வியப்புற்று அக்குளத்திலேயே தங்க வைத்திட்டாராம். இதனுல் இவ்வூரைக் காசியிலும் வீசம் பெரிது என்று மக்கள் வழி வழியாகப்பேசுகிருர்கள். இக்குளம் தெளிந்த நீரையுடையது. மற்றைய இரண்டும் மிகச் சிறியன; மாடுகளைக் குளிப்பாட்ட உதவுகின்றன. ஆனுல் பொதுவாக எல்லாக்குளங்களும் கட்டுக்காவல் இல்லாமல் தண்ணீர்க் குடிப்பதற்குத் தகுதியற்றனவாக இருக்கின்றன. கால் நடைகளைக் குளிப்பாட்டுவதாலும், தென்ன மட்டைகளை ஊறப் போடுவதாலும், மற்றும் மலங் கழுவுவார் சார்தலினுலும், மேற்பார்வைக் குறைவாலும் இக்குளங்கள் கெட்டுப்போ யிருக்கின்றன. "தூய நீர் குடிப்பது உடலுக்கு நலம்; நோயைத் தடுக்கும்" என்பது அவ்வூரார் அறிந்திருந்தும் பிணி முதலியன ஊழ் வினைப் பயனுல் வருகின்றன என்ற கொள்கையால் தண்ணீரைப் பாதுகாக்க யாதொரு முயற்சியும் செய்வதில்லை போலும்.

4. குடிகள் :—பழங்குடிகளாகிய வேளாளர், கள்ளர், அகம்படியர் ஊரகத்தும், ஆதிதிராவிடர் ஊர்ப்புறத்துச் சேரிகளிலும் உறைகிருர்கள். குடிகள் மிக ஏழைகள். வீடுகள் பெரும்பாலும் வைக்கோலினுல் வேய்ந்த கூரைவீடுகளே. ஒரு சில ஓட்டு வீடுகளும் காணப்படும். ஒரு காலத்தில் நான்கு தெருக்கள் ஒழுங்காக அமைந்திருந்தன ; அவைகளில் இரண்டு பார்ப்பனத் தெருக்கள் ; இவ்விரண்டும் பாழடைந்தன. மேனுட்டுப் படிப்பை முற்றிலும் கைக்கொண்டு பார்ப்பனர்கள் எல்லோரும் வேலை தேடி வெளியேறிவிட, வீடுகள் இடிந்து பாழாயின. பல இடிந்த கட்டிடங்கள் இன்னும் காணப்படும்.

பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டின் பின் புறத்திலும் தோட்டங்கள் உள. ஆனுல் அவைகளில் முயற்சியின்மை

யால் இன்றியமையாத புன்செய்ப் பயிர்கள் எதையும் காண்ப தரிது.

5. திருக்கோயில்கள் :—சிறிய ஊராகுலும் பல கோவில்கள் உள. கீழ்ப்பாகத்தில் சிவன் கோவிலும், மேற் பாகத்தில் காமாட்சியம்மன் கோவிலும், தென்புறத்தில் ஐய ஞர் கோவில் மாரியம்மன் கோவில் தற்செயலாய் வயலில் அகப்பட்ட "தான்றோன்றி" யம்மன் கோவில் ஆகிய மூன் றும் இருக்கின்றன. பழைய நாளில் ஒரு பெருமாள் கோவில இருந்து அடியோடு அழிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. இன்னுமோர் ஐயஞர் கோவில் ஊருக்குக் கிழக்கே இருந்த தாகவும் அந்த ஐயஞர் நரிக்குப் பயந்ததாகவும் அதனுல் அங்குள்ள சிலைகள் சிவன் கோவிலில் கொண்டு வந்து வைக் கப்பட்டன என்றும் சொல்லிக் கொள்ளுகிருர்கள். மேற்படிக் கோவில் அழிந்துபோய் விட்டதோ என்னமோ தெரிய வில்லை.

ஆனுல் இவைகளில், செல்பவர் ஊன்றிப் பார்க்கவேண் டியன காமாட்சியம்யன் கோவிலும் கீழ்க்கோவில் எனப் படும் கைலாசநாதர் கோவிலுமாம்.

6. காமாட்சியம்மன் கோவில்:—இது மிகவும் பழுது பட்டு அப்பன் அம்மை அமர்ந்த கூடங்கள் மாத்திரம் உள. அவையும் நொடித்த நிலையில் உள. கூடத்தின் கூரை இடிந்து போனதினுல் கீற்று கொண்டு மூடப்பட்டிருக்கிறது. பக்கச் சுவர்கள் அலாடித்து மெலிந்துபோயின. கதவுகளும் இல்லை. சில வேளை மாடுகள் பெருமானையும் தாயாரையும் காணச் சென்று விடும். பல ஆண்டுகளுக்கு முன் இக்கோவில் மிகப் பரந்த இடத்தை அடைத்துக் கொண்டு நின்றது. அதின் தீங்கு விளைக்கக் கூடிய பழுதான நிலைமை யறிந்து சர்க்காரார் பல பாகங்களையும் இடித்து விடும்படியாகச் செய்து விட்ட னர். பின்னர் சிலர் அதனைப் புதுப்பிக்க முயன்றனர். ஆனுல்

அதற்குத் திரண்ட பொருள் வேண்டியிருந்தபடியால் அம் முயற்சி அப்பொழுதே நின்றுவிட்டது ; இப்பொழுது யாவரும் வருந்தத்தக்க நிலையிலிருக்கிறது. பெருமையோடு உயர்ந்த அரண்மனை கட்டி வாழ்ந்தோர் காலமாறுபாட்டால் பொருளிழந்து இருப்பிடம் பழுதுபார்க்க முடியாமல் விழுந்து கொண்டேவரக் கொஞ்சம் நல்லபடியாக விருக்கும் ஒரு சிறிய பக்கத்தில் ஒண்டிக்கொண்டு இருக்கும் நொடித்த செல்வக் குடியினரைப்போல் உலகை யளித்த அம்மையாரோடு சிவ பெருமான் கீற்றுக்கூரையின் கீழ் அமர்ந்திருக்கும் காட்சியைக் கண்ணுறும் சைவமக்கள் மனம் வருந்தாமலிரார்.

7. கைலாசநாதர் கோவில் :—இது ஒரு காலத்தில் பெருங் கோவிலாகப் பல சுற்றுகை (பிரகாரங்)களோடு மிக நல்ல நிலைமையிலிருந்தது என்பர். கீழ்ப்புறம் இருந்து வருபவர் மிகத் தொலைவிலேயே முதலில் காண்பது இக்கோவிலின் அழகிய தோற்றமே. அதனைக் கண்டதும் காண்போர் மனதில் இவ்வூர்த்தெய்வ அன்பு நிறைந்த மக்களுடன் விளங்கும் பெரிய ஊர் என்ற எண்ணத்தை உண்டாக்கும்.

இதன் பழமையை ஆராய்ந்தறிவது அருமை எனலாம். இதிலிருக்கும் அருவுருவத் திருமேனி முனிவர்களுக்கரசாகிய அகத்தியரால் ஏற்படுத்தப்பட்டதென்றும் அதனால் அதற்கு அகத்தீச்சுரர் எனப் பெயர் என்றும் பேசுவார்கள். அதனால்தான் அடைமொழி கொடாமல் ரிஷி எனப் பேசினால் முனிவர் தலைவராகிய அகத்தியரையே குறிக்கும் என்பதைக்காட்ட அவரால் வணங்கப்பட்ட சிவனிடத்திற்கு ரிஷியூர் என்று பெயராயிற்று என்றும்கூறுவர். இப்பொழுது சிவபெருமானை இவ்விடத்தில் கைலாசநாதர் எனக் கூறுகின்றார். காரணம் என்னவென்றால் முன் வழங்கிய பெயர் மறந்துபோகக் "கைலாசநாதனையும் காணலாமே" என்ற

அப்பர் வாய்மொழியை ஒட்டி இப்பெயர் வழங்குவதாகத் தெரிகிறது.

இவ்வூர்க்கு ஓர் ஊர் வரலாறு (தலபுராணம்) வடமொழியில் உளது என்றும், அது கும்பகோணத்தருகில் உள்ள வலங்கைமான் என்னும் ஊரில் ஒரு பார்ப்பனரிடத்தில் இருக்கிறதென்றுஞ் சொல்கிறார்கள். இவ்வூரார் அதனை மொழி பெயர்க்க விரும்பி அவரை அந்நூலைத் தரும்படி வேண்டினர். அவர் பெருந்தொகை கேட்டனர். அதைச் சேகரிக்க முடியாமையால் அம்முயற்சி நின்றுவிட்டது.

8. பதிகம் பெறுக்குறை:—மூவர் பாடல் பெற்ற விடங்களே சிறந்த ஊர்களாக எண்ணப்படுவது யாரும் அறிந்தது. இரிஷியூர்ப்பெருமானை மூவரில் எவரேனும் பாடினார்களோ என்றால் இப்பொழுதுள்ள பாடல்களில் இன்று வழங்கும் ரிஷியூர் என்ற பெயரோடு யாதொரு பதிகமும் காணப்படவில்லை. ஆனாலும் இதன் வடக்கே 4 மைல் எல்லைக்குளுள்ள திருக்கொள்ளம்பூதூரும், கிழக்கில் 4 மைலிலுள்ள திருவிடைவாய் என்னும் புதிதாகப் புதரிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட ஊரும், தெற்கில் 5 மைல் தொலைவிலுள்ள திருப்பாளேசுரம் என்னும் பாம்பணியும், மேற்கில் 3 மைல் தூரத்தில் இருக்கும் திருப்பூவனூரும் பாடல் பெற்றிருக்கின்றதைப் பார்த்தால் மூவரில் எவரேனும் இவ்வூரையும் பாடியிருக்கலாம் என்றும் அப்பதிகம் இறந்துபட் டிருக்கலாம் என்றும் உய்த்துணர இடமுண்டு.

நெருங்கிய காலத்திருந்த வடகரை ஆலத்தூர் கோவிந்த பிள்ளை யென்பவரும் திருக்கருகாவூர் அரனூர்க்குப் பதிற்றுப் பத்து அந்தாதி பாடியவரும் ஆகிய சிறந்த புலவர் இவ்வூர்க் கைலாசநாதர் மீது பதிகம் முதலியனவும், கற்பகவல்லி எனும் பெயரோடு வழங்கும் அம்மைமீது பந்தடி, கும்மி

முதலிய பாடல் வகைகளும் பாடியுள்ளார். அந்நூல்கள் மறைந்து கிடக்கின்றன.

9. கல்வெட்டு:—ஆனாலும் இக்கோவில் மிகப் பழைமை யானதென்பதை மறுப்பதற் கிடமில்லை. அதன் பழமையைச் சிவபெருமான் எழுந்தருளிய நடுக்கூடத்தின் இரு பக்கத்துச் சுவரின் வெளிப்புறத்தில் பொறித்துள்ள கல்வெட்டுகள் காட்டுகின்றன. அரசாங்கத்துப் பழங்கட்டிடப் பிரிவினையார்(Archeological Dpt)இக்கல்வெட்டுக்களை 1906 லோ அல்லது 1907 லோ படியெடுத்துச் சென்றனர். அவை இன்னும் அச்சாகி வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அவைகளில் சொல்லி உள்ளன இன்னவென்பதை ஒருவாறு அவர்கள் அப்பொழுதே விளக்கிக் காட்டினார்கள்.

10. கோவிலைப் பழுதுபார்த்தல்:—கல்வெட்டில் கண்டபடி அக்கோவில் 11-ம் நூற்றாண்டில் சிவன் கோவில்களைக் காவிரியாறு போன விடங்களில் எல்லாம் கணக்கில்லாமல் கட்டிவைத்த சோழர்களுக்குள்ளே சிறந்த குலோத்துங்க சோழனால் பழுது பார்க்கப்பட்டது. இதற்கு நாலு வேலி நிலம் இருந்ததாம். அந்நிலம் இப்பொழுது தஞ்சை மாரியம்மன் கைவசமாக இருக்கிறது. இவ்வூர்க்குப்“பிழியூர்” என்று பெயர் காணப்படுகிறது. கல்வெட்டு முழுவதையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் இன்னும் என்ன என்ன செய்திகள் கிடைக்குமோ. 11-ம்நூற்றாண்டில் பழுதுபார்க்கப்பட்டிருந்ததலால் இக்கோவில் மிகப்பழமையானது என்பதும் மூவர் காலத்தில் இருந்திருக்கலாம் என்றும் அறியக்கிடக்கிறது.

100 ஆண்டுகளுக்கு முன் இக்கோவில் பெரிய பல கட்டிடங்களும் அம்மனுக்குத் தனித்த பெரியதொரு கட்டிடமும் மிகப்பரந்த மதில்களும் உடையதாக இருந்தது. பழுதடைந்ததின் காரணமாகஅப்பொழுது பலபாகங்களைஇடித்து விட்டார்களாம். அம்மன் திருமாளிகையும் புறமதிற் சுவர்

களும் இருந்த விடம் தெரியாமல் போய்விட்டன. தனி யிடம் அழிந்துபோக அம்மையைக் கூத்தப்பெருமான் அமர்ந் திருந்த அறையில் எழுந்தருளச்செய்திருக்கிறார்கள். அக்கட்டி டங்களின் கடைச்சாலைகளை இன்னும் காணலாம். இப் பொழுது மிகுந்துள்ளவைகள் சிவபிரான் எழுந்தருளிய நடுமண்டபமும் அதைச்சுற்றி முப்புறத்திலும் ஒரு சுற்று கையும் (பிரகாரமும்) அதையடுத்து ஒருவரிசை சிறிய அறை கள் பல கொண்ட சுற்றுமண்டபங்களும் உள. அவைகளில் சூழுந்தேவர்கள் தங்கியிருக்கிறார்கள், முன் பக்கத்தில் பல கால்களையுடைய முன் மண்டபமும் அம்மைதங்கும் பேரறை யும் இருக்கின்றன. அம்மையை வலம்வர இடமில்லை. வாயிற்கோபுரம் இல்லை. இவ்விதமாக இக்கோயில் மிகக்குறுகி விட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்னேயும் பழுது உண்டாக, மறுபடியும் ஊரார் தம்மாலியன்ற ஏற்பாடுசெய்து ஒருவாறு சீர் செய்தார்கள். இருந்தும் இப்பொழுது மறுபடியும் பழுது பட்டு அம்மன் அய்யன் எழுந்தருளிய அறையின் மேலுள்ள சிகரங்கள் விழுந்துவிட்டன. தூண்களெல்லாம் அலரடித்து ஆடிப்போய் நிற்கின்றன. இப்படியே விட்டுவிட்டால் தீங்கு விரைவில் நேரிட்டாலும் நேரிடலாம்.

11. சீர் செய்கை தேவை:—இப்படிப்பழுதாக இருக்கும் கோயிலைப் புதுக்க வேண்டியது மிகத்தேவை யென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. கோவிலுக்கோ நல்ல வரும்படி வரும் நிலமாவது வேறு பொருளாவது இல்லாததினால் கோவிலாரே பழுது பார்க்க முடியவில்லை. இருப்பது ஒரு வேலி நிலம். அதில் வரும் நெல்லோ மிகக் குறைவு. அதைக் கொண்டு இரண்டு வேளை பூசனையும், குருக்கள் குடியொன் றின் வாழ்க்கையும், வரி நிலமாதலால் துரைத்தனத்தார் வரி கட்டலும் செய்ய வேண்டும்.

12. ஊரார் பணி:—வரும்படி இவ்வளவிற்கும் போதாமையால் ஊரார் அரசு இறையைப் பங்கு வைத்து ஒவ்வொருவரும் தாங்கள் செலுத்தும் வரியோடு அதனைச் செலுத்திவிடுகிறார்கள். திருக்குளத்தின் மீன் விலை குத்தகைத் தொகை கோவிலில் நாடோறும் நடக்கும் பூசனைக்கு செலவிடப்படுகிறது. மீன் விலையால் பூசனை நடத்தல் விரும்பக் கூடிய முறையாக யாரும் சொல்லார். அதனைக் கூடிய விரைவில் நிறுத்த அன்பர் எவரேனும் முன் வந்து தக்க உதவி செய்வரேல் அது பெரும் அறச் செயலாகும். நாட் பூசனையே இவ்வாறு இருக்கும்போது பழுது போக்க இவ் வூரார் என்ன செய்வார்? அவர்கள் தங்கள் உழைப்பைச் சிவபெருமான் திருவடிக்கு உரிமையாக்க ஆயத்தமாக இருப்பினும் பெரும்பொருள் இன்றியமையா திருக்கின்றதே. அதற்கு என் செய்வார்!

13. நாட்டுக்கோட்டை செட்டிமார் பணி:—நீண்ட நாளாகக் கோவிற் திருப்பணியில் ஈடுபட்டுள்ள நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் பொதுவாக மூவர் பாடல் பெற்ற கோவில்களையே சீர் செய்கிறார்கள். மூவர் பாடலுக்கு அவர்கள் காட்டும் மதிப்பைப் பாராட்ட வேண்டியது நம் கடமையே. ஆயினும் சிவபெருமான் கோவில் எதுவாயிருந்தாலும் பழுதுடையதாக இருக்கக் கண்டால் அதைச் சீர்ப்படுத்த முன் வருதல் பொதுவாகச் சைவச்செல்வர்களாகிய அவர்கள் கடமையன்றோ? இக்கட்டுரையை நோக்கிடும் செட்டிமாரில் எவரேனும் இத்திருப்பணியில் தலையிடுவார்களானால் மிகவும் எளிதில் இக்கோவில்களை நன்னிலைக்குக் கொண்டுவர முடியுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

14. திருமடத் தலைவர்கள் பணி:—நிற்க, சைவ சமயத்தையும் சிவனார் கோவில்களையும் பாதுகாத்தற்கும் சைவமெய்யறிவு நூல்களை மக்களுக்கு ஓதுவித்தற்கு மெழுந்த திருவா

வடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் முதலியவிடத்து மடத்தலைவர்கள் இப்பணியை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இதனை மிக எளிதில் செய்து முடிக்கலாம். அன்றி, முன்னைத் தவத்தால் சிவபிரானால் இப்பிறப்பில் பெரும் செல்வத்தை அடைந்துள்ள எச்செல்வராயினும் அம்மைப் பயன் கருதியேனும் இல்லையேல் திருப்பணி தமது கடமையென எண்ணியேனும் இதனைச் செய்வார்களாயின் அவர்கள் புகழ் நிலைத்து விளங்கக் கூடும்.

15. இனி, கோவில் புரக்கும் குழுவினர் (Hindu Religious Endowment Board) மிக்க வரும்படியுள்ள கோவில்களில் உள்ள மிச்சமான பொருளில் சிறிது உதவினாலும் இக்கோவில்களைச் சீர்திருத்தி விடலாகும். ஊரார்கள் இந்தக் காரியத்தில் ஊக்கமுடையவர்கள். ஆகையால் எவர் முன் வந்தாலும் அவர்களைப் பின் தொடர்ந்து உதவி செய்வார்கள்.

16. முடிவு:—புதிய கோவில்களைக் கட்டுவதிலும் பழைய கோவில்களைப் புதுப்பித்தல் பெரிய அறம் என்பது சைவ சமய நூல் துணிபு என்பது யாவரும் அறிவர். இப்பணியைச் செய்து முற்றுவிக்குமாறு சிவ சிந்தனையுடைய செல்வர் உளத்தில் மறைந்து நிற்கும் இறைவன் அவர் நெஞ்சில் இவ்வெண்ணத்தைத் தோற்றி யருளுமாறு எல்லாம் வல்ல கைலையங் கடவுளை வணங்குவோமாக.

பல்லார் தொழுதுன் பதம்பெறப் பாரதனில்
நெல்லார் வயலிருடை நின்றமலை—வில்லா
திருப்பணிநிற் கோவிற்கே செய்தற்குச் செல்வர்
விருப்புறவே நின்றருள் வீர்.

# சமாஜ விசேஷ மகாநாடு

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

உலகெலாமாகி வேருய் உடனுய் நிற்கும் உமைபங்கன் வெளிப்பட்டு அன்பர்க் கருள் புரிந்த திருத்தலங்களுள் சிறந்தவொன்று திருக்கொள்ளம்பூதூர் ஆகும். காவிரி நதியின் பிரிவுகளிலொன்ருகிய வெட்டாறு என வழங்கும் முள்ளியாற்றங்கரையி லித்தலம் உள்ளது. திருஞான சம்பந்தப் பெருமான் இத்தலத்தைத் தரிசனம் செய்வதற்காக நாவலமே கோலாகக் "கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்" என்ற அருமைத் திருப்பதிகமோதி ஓடம் செலுத்தித் திருக்கோயிலை அடைந்து வில்வவனநாதரையும் வடிவுடையம்மையையும் கண்குளிரக் கண்ட வரலாறு பெரிய புராணத்துள் இனிய பாடல்களாற் கூறப்படுகின்றது. பல நூற்ருண்டுகட்குமுன் சோழ மன்னர்களாற் கட்டப்பட்ட இக்கோயில் சிதைந்திருந்ததை நற்சாந்துப்பட்டி பெ. ராம. இராமன் செட்டியாரவர்கள் கண்ணுற்றுத் திருப்பணி வேலையைத் தொடங்கிச் சில ஆண்டுகட்குள் கருங்கற் திருப்பணியாகக் கோயிலைப் புதுப்பித்தனர். அவர் மக்களும் குடும்பத்தினரும் இத்திருப்பணியை முற்றுப்பெறச் செய்து குடமுழுக்குப் பெருஞ் சாந்தியாம் மகா கும்பாபிடேகத்தை இவ்வாண்டு ஆனித் திங்கள் பதினன்காம் நாளில் (27-6-37) மிகச் சிறப்பாக நடத்தி வைத்தனர். இத்தலம் ஒரு சிறு கிராமமாயினும் பல்லாயிரம் மின்சார விளக்குகள் ஒளி பெருக்கியமையாலும் ஆறு குளம் கால்வாய் முதலிய பல நீர் நிலைகள் தண்மை தந்தமையாலும், பல பூஞ்சோலைகளும் காவணங்களும் பந்தரும் நீணிழலளித்தமையாலும், பல்லாயிர மக்கள் சிவசிவ முழக்கம் செய்தமையாலும் இது எந்தையீச னிணையடி நீழலாகவே திகழ்ந்தது.

இக்கும்பாபிடேக நிகழ்ச்சியின் ஒரு சிறந்த அங்கமாக நமது சமாஜ விசேஷ மகாநாடு 1937வூ ஜூன் மீ 26, 27-ம் தேதிகளில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்

பேராசிரியர் பண்டிதமணி - சைவத்திருவாளர் - மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் கூடிற்று. தமிழ் நாட்டில் நடைபெறும் கும்பாபிடேகங்களில் திருப்பணியாளர்களால் அழைத்து உபசரிக்கப்பெற்று ஒரு விசேஷ மகாநாட்டை நமது சமாஜம் நடத்தியது இதுவே முதன் முறையாகும். தலைவர், சொற்பொழிவாளர்கள், சமாஜத் தொண்டர்கள், மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஆகிய எல்லோருக்கும் அமைதியான உறைவிடம், இனிய உணவு, வண்டி வசதிகள், அன்பார்ந்த உபசரிப்பு முதலிய பலவகைகளிலும் திருப்பணிச் செல்வர்கள் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து ஏற்பாடு செய்தது போற்றற்குரியது.

முதல்நாள் பிற்பகலில் சமாஜத்தலைவரும் சொற்பொழிவாளர், தொண்டர்கள் முதலியோரும் மேள வாத்தியங்களுடன் ஊர்வலமாக வரவேற்கப்பட்டனர். திருக்குளத்தின் கீழ்க்கரையிலமைக்கப்பெற்ற கவுணியன் திருக்காவணத்தில் மகாநாடு கூடிற்று. வேதாரணியம் - திரு. அருணாசல தேசிகரவர்களும் பிறரும் தமிழ்மறை யோதிய பின்னர் தூத்துக்குடி - திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் முன் மொழியத், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பின் மொழியத், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் வழிமொழியத், திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமை வகித்தார்கள். பண்டித ரத்தினம் - குகஸ்ரீ - புழலை திருநாவுக்கரசு முதலியாரவர்க ளியற்றிய நல்வரவேற்புக் கவி வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு திருப்பணிச் செல்வரும் நமது சமாஜ அங்கத்தினருள் ஒருவருமாகிய சைவத்திருவாளர் - பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் தலைவர், சொற்பொழிவாளர், சமாஜத்தொண்டர், அங்கத்தவர், மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஆகிய அனைவர்க்கும் நல்வரவேற்புக் கூறினார்கள். பிறகு தலைவர் தமது தலைமையுரையைச் சுருக்கமாக நிகழ்த்தினார்கள். பின்பு திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் "செயற்கருஞ் செயல் செய்த தீரன்" என்னும் பொருள்பற்றி இயற்பகை நாயனார் சரித்திரத்தின் பகுதிகளை விளக்கிச் சிவபெருமான்

நாயனுரை இவ்வாறழைத்ததை விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்கள். பின்னர் திரு. சாமி - வேலாயுதம் பிள்ளையவர்கள் "சைவமும் ஆரியமும்" என்பது பற்றிப் பல நுண்பொருள்களை விளக்கி ஆரியமொழியிலுள்ள மந்திரங்களையெல்லாம் தமிழிலேயே பெயர்த்துக் கொண்டு சைவச் சடங்குகளை நடத்த வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார்கள். பிறகு திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் "சைவ வீரர்" என்பதுபற்றி வாலி, இராவணன் ஆகிய இருசைவ வீரர்கள் வரலாற்றைக் கம்பராமாயணச் செய்யுள்களைக் கொண்டே விளக்கிக் கம்பர் சிவபரத்துவம் கூறும் பல இராமாயணச் செய்யுள்களை நயம்படக்கூறி விவரித்தார்கள். தலைவரவர்கள் அவ்வப்போது சொற்பொழிவுகட்குரிய தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இரவு ஒன்பது மணிக்கு முதல்நாட் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் நிறைவேறிற்று.

இரண்டாம் நாள் மாலை நான்கு மணிக்கு மீண்டும் பேரவை தொடங்கிற்று. முதலில் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "கண்ணப்பரன்பு" என்பது பற்றித் தமது ஆராய்ச்சியிற் கண்ட பல முடிபுகளை வற்புறுத்தித் தேசபத்தி, சீர்திருத்தம், தீண்டாமைவிலக்கு முதலிய பல கருத்துக்களமைந்த தமது சொற்பொழிவை மிக விரிவாக நிகழ்த்தினார்கள். பிறகு திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் "சிவாலய சேவை" என்பது பற்றித் தற்காலத்திய நாகரிகச் சீர்கேடுகளை விளக்கித் திருக்கோயில் வழிபாடொன்றே அக்கேட்டை நீக்கும் வழியென்பதை வற்புறுத்தினார்கள். இச்சொற்பொழிவின் இடையே மகாநாட்டுத் தலைவர் சிறிது ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பியதால் சமாஜத் தலைவர் திரு. ந. சிவகுருநாதபிள்ளையவர்கள் தலைமை வகித்து அடுத்த இரண்டு சொற்பொழிவுகள் முடிவதற்குச் சிறிதுமுன்புவரையில் கூட்டத்தை நடத்திவைத்தார்கள். பிறகு திரு. இராமபத்திர உடையாரவர்கள் "திருப்பணி" என்பதுபற்றி மிகச்சுருங்கிய சொற்பொழிவொன்றை நடத்தினார்கள். பிறகு திரு. ம. பாலசுப்பிரமணிய முதலி

யாரவர்கள் "சைவச் செயல் முறைகள்" என்பதுபற்றி அச்செயல் முறைகள் இக்காலத்திய ஆராய்ச்சி யறிவுக்குப் பொருத்தமானவை யென்பதைச் சுருங்கக் கூறினார்கள். பிறகு சமாஜத்தின் சார்பாகவும் திருக்கொள்ளம்பூதூர் வேடம்பூர் வாசிகள் சார்பாகவும் திருப்பணிச் செல்வர்கட்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு திரு. பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் திருப்பணியாளர்கள் சார்பாகவும் சமாஜக் காரியதரிசி சமாஜத்தின் சார்பாகவும் தலைவர், சொற்பொழிவாளர் முதலிய அனைவற்கும் நன்றி கூறினார்கள். தலைவர் அனைவர்க்கும் நன்றியும் வாழ்த்தும் கூறி முடிப்புரை பகர்ந்தார். இம்மகாநாட்டில் ஒலி பெருக்குங் கருவி (Loudspeaker) சொற் பொழிவுகளை அனைவரும் அமைதியாக நெடுந் தூரத்திலிருந்தே கேட்கும் படிச் செய்தது. கடவுள் வாழ்த்துடன் இம்மகாநாடு இனிது நிறைவேறிற்று.

இத்திருத்தலத்தின் திருப்பணிச் செல்வர்களாகிய பெ. ராம. குடும்பத்தினர் இக்கும்பாபிஷேகத்தின் அங்கமாகச் சமாஜ விசேஷ மகாநாடு ஒன்றை நடத்திவைத்தது இத்தமிழ்நாட்டுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இவர்கள் முன்மாதிரியைப் பின்பற்றித் திருமாற்பேறு கும்பாபிடேகத்திலும் காஞ்சிபுரம் ஸ்ரீ மெய்கண்டார் கழகத்தினரைக் கொண்டு சமயப்பிரசாரம் நிகழ்த்தப்பெற்றது அளவற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இஃதேபோல் இனிவரும் கும்பாபிடேகங்களிலும் திருவிழாக்களிலும் அவற்றை நடத்திவைப்பவர்கள் தகுதி வாய்ந்த சமயப் பிரசாரத் தாபனங்களின் வாயிலாக மகாநாடுகளை நடத்திவைப்பார்களாக.

நமது விசேஷ மகாநாடு மட்டுமேயன்றி "சிவாலயமும் கும்பாபிடேகமும்" என்று வாலையாநந்த சுவாமிகள் என வழங்கிய ஸ்ரீமத் சச்சிதாநந்த சுவாமிகள் எழுதிய நூலொன்றும், "கொள்ளம்பூதூர் கோயிற் பெருமை" என்று சாமி. வேலாயுதம் பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற துண்டுப்பிரசுரம் ஒன்றும் இக்கும்பாபிஷேக நினைவுக்குறிகளாக அழகிய

முறையில் அச்சிடப்பெற்று மகாநாட்டுப் பிரதிநிதிகட்கு இலவசமாக வழங்கப்பட்டன. இவற்றின் பிரதிகளைத் திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள் (தலைமையாசிரியர், போர்டு உயர்தரபாடசாலை, உரத்தநாடு, தஞ்சை ஜில்லா) மூலமாகப் பெறலாம். (சமாஜத்துக்கு எழுதுதல் கூடாது).

சமாஜ விசேஷ மகாநாட்டையும் இக்கோயில் திருப்பணி, கும்பாபிஷேகம் முதலியவற்றையும் நடத்திவைத்தவர்கள் நற்சாந்துப்பட்டி - பெ. ராம. குடும்பத்தினராவர். அவர்கட்கு நமது சமாஜத்தின் நன்றியும் சைவ நன்மக்கள் நன்றியும் உரியதாகுக. சிறப்பாக இக்குடும்பத்தினருள் இளைஞராக விளங்கும் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்களை தனித்த முறையில் நன்றி பெறுதற்குரியராவர். இவர் மிகுந்த ஊக்கத்துடன் மிகச் செம்மையாகவும் திருத்தமாகவும் விரைவாகவும் எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்து, நமது சமாஜத் தொண்டுகளில் நெடுநாள் ஈடுபட்டுள்ள தன்மையால், சமாஜ விசேஷ மகாநாட்டை நடத்தும்படி வற்புறுத்திப் பல தலைவர்களை நேரிற் கண்டு அவர்களுடைய நல்வரவையும் சொற்பொழிவுகளையும் உறுதி செய்து, வேறு பற்பல வழிகளிலும் இப்பெருஞ்சாந்தி விழாவின் நுட்பங்கள் பலவற்றைக் கூர்ந்து நோக்கித் திட்டம் செய்து தொண்டு புரிந்தது பெரிதும் போற்றற்குரியது. இக்கும்பாபிடேகத்தின் நினைவுக்குறியாக நூறு ரூபா நன்கொடையும் சமீப காலத்தில் வேறு பல உதவிகளும் செய்து நமது சமாஜத்தை ஊக்குவிப்பதாக இவர் உறுதி கூறியுள்ளார். நமது சமாஜ விதிகளின்படி திரு. பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியாரவர்களை நமது சமாஜபோஷகருள் ஒருவராகப் பதிவு செய்துகொண்டோம். சிதம்பரம் செட்டியாரவர்கள் நீடூழி வாழி வாழி.

## சைவ மகாஜன சபை

சென்ற ஜூன் மாதம் 9-ம் தேதி இச்சபையின் இருபதாவது ஆண்டு விழா பண்டித எஸ். வீரேசலிங்க சாஸ்திரியார் அவர்கள் தலைமையில் பெஜவாடாவில் திரு. கே. நாகேஸ்வர ராவ் பந்துலு அவர்களுக்குச் சொந்தமான ஸ்ரீ துர்க்கவிலாஸில் நடைபெற்றது. சபையின் காரியதரிசியான திரு. கே. பூர்ணமல்லிகார்ஜுனர் இருபதாவது ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

சபையின் சார்பாக மறுநாள் பண்டிதர்களின் 'பரிஷத்' ஒன்றும் கூடிற்று. சைவ சித்தாந்தத்தின் சிறப்பைப்பற்றியும், அவற்றை எவ்வெவ்விதத்தில் பரவச் செய்யலாமென்பது பற்றியும் பேசப்பட்டன. இதில் மகா மகோபாத்தியாயர் எம். நாகலிங்க சாஸ்திரியாரும் கலந்து கொண்டார். அன்று மாலை மகா மகோபாத்தியாயர் எம். நாகலிங்க சாஸ்திரியாரின் தொண்டைப் பாராட்டுதற் பொருட்டு ஒரு கூட்டம் நடந்தது. அதில் அவருக்கு ஒரு பொற்கிழியும் வழங்கப்பட்டது.

மூன்றும் நாள் காலையில் சபையின் கூட்டம் கூடிற்று. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. அன்று மாலை சைவ இளைஞர் மகாநாடு நடைபெற்றது. அடுத்த ஆண்டின் செயலைக் குறித்தும் ஒரு திட்டம் கோலப்பட்டது.

---

## சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சிவஞானபாடியம், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. இப்பதிப்பில் சிவஞான போதமூலம், சிவஞான சுவாமிகளுடைய பாடியம், வடமொழிச் சிவஞானபோத மூலம், சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து, மெய்கண்டார் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றித் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூல் இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் ௫௭௬+40 பக்கங்கொண்ட முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற அழகிய பதிப்பு.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று;** ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது

**பதினெரு பிரதிகள் விலை ரூபா பத்து ;**
ரயில்வே பார்சல் கூலி, தபாற் கூலி வேறு

உடனே பிரதிகட்கு மணியார்டர் அனுப்புக.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 10. No. 7

# திருப்புகழ்

கந்தாலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில் விருத்தம், வேல்விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெய ரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக்குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும் பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஒரே நூலாக நல்ல கிளேஸ் காகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பட்டு முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணுமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூ. 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு 12.
நான்கு பிரதிகள் விலை ரூ. 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 2½.

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

கிடைக்குமிடம்:—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர், சென்னை.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapath Mudali Street, Royapettah, Edited and Published by A. Som sundaram Chettiar, M. A., for the Saiva Siddhanta Mal Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Stree Mylapore, Madras.